# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2032 கார்த்திகை 25 திங்கட்கிழமை (10-12-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:15




ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னிலையில் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட காட்சி. ஜனாதிபதியின் செயலர் பாலபட்ட பெண்டியும் படத்தில் உள்ளார். *(படம்:-சுடர் ஒளி)*

# சகல கட்சிகளுக்கும் புதிய அரசில் இடம்

## பதவியேற்றபின் ரணில் அறிவிப்பு

கொழும்பு, டிசெம்பர்10

**ஐக்கிய தேசியக் கட்சி அமைக்கவிருக்கும் புதிய அரசில் எல்லா அரசியல் கட்சிகளுக்கும் இடம் அளிக்கப்படும்.**

**நாட்டின் பன்னிரெண்டாவது பிரதமராக நேற்றுப் பதவியேற்ற பின்னர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு அறிவித்தார்.**

ஜனாதிபதி மாளிகையில் நேற்றுப் பிற்பகல் 2 மணி 22 நிமிடம் அளவில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ரணிலுக்குப் பதவிப்பிரமாணமும், இரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார். இவ்வாறான வைபவங்களின்போது வழமையாக ஜனாதிபதியின் முகத்தில் முகிழ்க்கும் வசீகரப் புன்னகையைக் காணததால் பலரும் ஏமாந்தனர்.

இந்த வைபவத்தில் ரணிலின் பாரியார் மைத்திரி விக்கிரமசிங்க, கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய, காமினி அத்துக்கோறளை மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(8ஆம் பக்கம் பார்க்க)



நேற்றைய வைபவத்தின் போது ஜனாதிபதி மாளிகையில் ரணில் தம்பதிகள். *(படம்:-சுடர் ஒளி)*

# இந்தியாவின் ஆதரவு பெற ரணில் அங்கு செல்வார்

நாட்டின் புதிய பிரதமராகப் பதவியேற்றிருக்கும் ரணில் விக்கிரமசிங்க, இம்மாதம் புதுடில்லி சென்று இந்தியத் தலைவர்களுடன் பேச்சு நடத்த உள்ளதாகக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விஜயம் தொடர்பான தகவலை கட்சி உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றுகையில் ரணில் வெளியிட்டிருக்கிறார்.

நாட்டின் மிக அவசரமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு இந்தியாவின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்காக இம்மாதம் அங்கு செல்லவிருப்பதாக ரணில் குறிப்பிட்டார்.

நீண்டகாலமாகத் தொடரும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக நோர்வேயின் உதவியுடன் எடுக்கப்பட்ட முயற்சிகள் தொடர்பாகவும் -

இருநாடுகளுக்கும் இடையிலான அரசியல், பொருளாதார விவகாரங்கள் குறித்தும் -

இந்தியத் தலைவர்களுடன் அவர் பேசுவார் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-9)

## காணாமற்போனோரின் உறவினர்கள்

# யாழ்நகரில் இன்று அமைதிப் பேரணி!

யாழ்ப்பாணம்,டிசெ.10

1996,1997ஆம் ஆண்டு காலப் பகுதியில் குடாநாட்டில் கைது செய்யப்பட்டுக் காணாமற்போனவர்கள் தொடர்பான விவரங்களைப் பெற்றுக் தருமாறு கேட்டு காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் இன்று நகரில் அமைதிப் பேரணி நடத்த உள்ளது.

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றிலில் இருந்து காலை 9.30 மணிககு பேரணி ஆரம்பமாகும். அங்கிருந்து கோயில் வீதியூடாக சோமசுந்தரம் அவனியூவில் அமைந்துள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தை பேரணி சென்றடையும். பேரணியில் கலந்துகொள்ளும் அனைவரும் தமது வாய்களைக் கறுப்புத் துணிகளால் மூடிக்கட்டியிருப்பர் என்று பாதுகாவலர் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

பேரணியின் இறுதியில் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்துககுக் வெளியே கூட்டம் ஒன்றும் இடம்பெறும். தமது கோரிக்கைகள் குறித்து அவர்கள் அங்கு தெரிவிப்பர்.

பேரணி பின்னர் அங்கிருந்து யாழ். செயலகத்துக்குச் செல்லும். பாதுகாப்பு அமைச்சுக்கு முகவரியிடப்பட்ட மகஜர் ஒன்றைப் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகள் அரச அதிபரிடம் கையளிப்பர் இந்தப் பேரணியில் அனைத்து மக்களையும் பொது அமைப்புக்களைச் சார்ந்தோரையும் கலந்துகொண்டு ஆதரவு வழங்குமாறு பாதுகாவலர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ம-6-7)

# கூட்டமைப்பு அரசில் சேராது; வெளியில் இருந்தே ஆதரவு!

## தலைவர்கள் கூடி நிலைப்பாட்டை முடிவு செய்வர்

யாழ்ப்பாணம்,டிசெ.10

தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான அரசுடன் சேர்ந்து கொள்ளப் போவதில்லை. ஆயினும் அரசின் நடவடிக்கைகளைப் பொறுத்து வெளியில் இருந்து அதற்கு ஆதரவை வழங்கும்.

தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பின் சிரேஷ்ட தலைவர் ஒருவர் நேற்றிரவு இவ்வாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

புதிதாக அமைக்கவிருக்கும் அரசில் எல்லா கட்சிகளுக்கும் இடமளிக்கப்போவதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அறிவித்திருப்பது குறித்துக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பிரதமர் விடுத்திருக்கும் இந்த அழைப்புத் தொடர்பாகக் கூட்டமைப்பின தலைவர்கள் இரண்டொரு தினங்களில் கூடி அதன் நிலைப்பாட்டை வெளியிடுவர் என்றும் -

அதன்பின்னர் அவர்கள் ரணில் விக்கிரமசிங்கவை நேரில் சந்தித்துக் கூட்டமைப்பின் முக்கிய கோரிக்கைகளை முன்வைப்பர் எனவும் -

அவர் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு நிர்வாகம் தொடர்பான எந்த விடயத்திலும் புதிய அரசு எங்களைக் கலந்தாலோசித்தே முடிவுகளை மேற்கொள்ளவேண்டும்.

யுத்தத்தை உடனடியாக நிறுத்தி, புலிகள் மீதான தடையை நீக்கி அவர்களுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்பதே எமது பிரதான கோரிக்கையாகவும், நிபந்தனையாகவும் இருக்கும்.

ஈபிடிபி, புளொட் போன்ற அமைப்புகளை புதிய அரசில் சேர்த்துக்கொள்வதை கூட்டமைப்பு கடுமையாக எதிர்க்கும் - என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## எதிர்க்கட்சி தலைவர் பதவி ரத்னசிறிக்கே?

கொழும்பு,டிசெ.10

எதிர்க்கட்சித் தலைவர் பதவி முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவுக்கே வழங்கப்படும் - என்று பொ.ஐ.முன்னணியின் பொதுச் செயலாளர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்தார்.

பொதுத் தேர்தல் ஒன்றில் தோல்வியடையும் பிரதமர் ஒருவருக்கே எதிர்க்கட்சித் தலைவர் பதவி கொடுப்பது வழமை. இதில் எந்தவித மாற்றமும் ஏற்படாது என்றும் அவர் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்குப் போட்டியோ இழுபறியோ ஏதுமில்லை எனவும் அவர் சொன்னார்.

## ரணிலுக்கு வாஜ்பாய் வாழ்த்து

கொழும்பு,டிசெ.10

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பேய், இலங்கையின் புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு தனது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி வெற்றி பெற்

(8ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றிரவு 10 மணி முதல் ஊரடங்கு


கொழும்பு,டிசெ.10

தலைநகர் கொழும்பு தவிர நாட்டின் சகல பகுதிகளிலும் நேற்றிரவு 10 மணி முதல் அமுல் செய்யப்பட்ட ஊரடங்குச் சட்டம் இன்று காலை 5 மணியுடன் நீக்கப்பட்டது.

கொழும்பு மாவட்டத்தில் நேற்றிரவு 11 மணி முதல் இன்று காலை 5 மணி வரை ஊரடங்கு அமுலில் இருந்தது. (ஐ-9)

# மீண்டும் அரசியல் பணிக்கு திரும்புகின்றார் சிவசிதம்பரம்

## தேசியப்பட்டியல் எம்.பியாக அறிவிப்பு



கொழும்பு,டிசெ.10

தமிழர் கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் எம்.பியாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூத்த தலைவர் மு.சிவசிதம்பரம் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

அவர் விரைவில் நாடு திரும்பி எம்.பி. பதவியைப் பொறுப்பேற்று அரசியல் பணிகளில் ஈடுபடுவார் என்று கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவர் வீ.ஆனந்தசங்கரி அறிவித்திருக்கிறார்.

நீண்டகாலம் சுகயீனமுற்று வெளிநாட்டில் சிகிச்சை பெற்றபின் அங்கேயே தங்கி வாழ்ந்த சிவசிதம்பரம், கூட்டணி ஆதரவாளர்கள் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க நாடு திரும்பி அரசியல் பணிகளை ஆரம்பிக்க இருப்பதாக ஆனந்தசங்கரி தெரிவித்தார். (ஐ)

# பயணிகள் கப்பல் சேவை இவ்வாரத்துடன் நிறுத்தம்

## மீண்டும் ஜனவரியிலேயே தொடங்கும்

யாழ்ப்பாணம்,டிசெ.10

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான 'சிற்றி ஒவ றிங்கோ' பயணிகள் கப்பல் சேவை இந்த வாரத்துடன் இடை நிறுத்தப்படுவதாக ஜி.எம்.கே.பி. கப்பல் நிறுவனம் அறிவித்திருக்கின்றது.

கிழக்குக் கடற்பரப்பில் உருவாகியிருக்கும் கொந்தளிப்பு நிலை காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகவும் -

மீண்டும் அடுத்த ஜனவரி மாதம் முதல் வாரத்தில் சேவைகள் மீண்டும் ஆரம்பமாகும் எனவும் -

அறிவிக்கப்பட்டிருக்கிறது.

'சிற்றி ஓவ் றிங்கோ' கப்பல் ஒரு தொகுதி பயணிகளுடன் நாளை செவ்வாய்க்கிழமை காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வந்து பயணிகளை இறக்கிவிட்டு மறுநாள் புதன்கிழமை இங்கிருந்து ஒருதொகுதி பயணிகளை ஏற்றிக்கொண்டு புறப்படும். அத்துடன கப்பல் சேவை இடைநிறுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருகிறது.

# புதிய மேயரை கூட்டணியின் அரசியல் குழு தெரிவுசெய்யும்

## நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.10

யாழ்.மாநகர சபைக்குப் புதிய மேயரைத் தெரிவுசெய்யும் நடவடிக்கையினை தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் குழுவும் பொதுக்குழுவும் விரைவில் தீர்மானிக்கும்.

யாழ்.மாநகர சபையின் மேயராக இதுவரை பதவி வகித்தவரும் தற்போது நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டிருப்பவருமான நடராசா ரவிராஜ் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

கட்சியின் அரசியல் குழுவும் பொதுக்குழுவும் கூடித் தீர்மானித்து மேயர் பதவிக்குப் பொருத்தமான ஒருவரை இம்மாத இறுதிக்குள் நியமிக்கும். அதன்பின் நான் எனது பொறுப்பிலிருந்து இராஜினாமாச் செய்வேன்.

பல அச்சுறுத்தலுக்கு மத்தியில் மேயர் பொறுப்பை ஏற்க கடந்த காலங்களில் எவருமே முன்வரவில்லை. ஆனால் தற்போது அப்பதவிக்கு போட்டி போடும் நிலைமை உள்ளது என்றும் ரவிராஜ் தெரிவித்தார்.

புதிய மேயர் பதவிக்கு கூட்டணியைச் சேர்ந்த மூவரின் பெயர்கள் அடிபடுகின்றன.

தற்போது பிரதி முதல்வராகக் கடமையாற்றும் செல்லன் கந்தையன், ஏற்கனவே பிரதி முதல்வராகக் கடமையாற்றிய சேவியர் மற்றும் கடந்த பொதுத் தேர்தலில் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர் அரவிந்தன் ஆகிய மூவரில் ஒருவர் இந்தப் பதவிக்கு நியமனமாகலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரதி மேயரையே புதிய மேயர் பதவிக்கு நியமிக்க வேண்டும் என்று கட்சிக்குள் ஒரு சாரார் விரும்புவதாகத் தகவல் வெளியாகி இருக்கிறது. (ஐ-180)

## ரத்வத்தையை கைது செய்யக் கோரி மடவள நகரில் ஆர்ப்பாட்டம்

கடந்த பொதுத்தேர்தலன்று கண்டி மடவள பகுதியில் பத்து இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையையும், அவரது மகனையும் உடனடியாகக் கைது செய்யுமாறு கோரி தொடர்ச்சியான ஆர்ப்பாட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மடவள நகரப் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை முதல் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டு வருகின்றது.

நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் அனுருத்தரத்வத்தையின் கொடும்பாவி ஒன்றும் எரிக்கப்பட்டது. பல்லாயிரக்கணக்கானோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

மேற்படி சந்தேகநபர்கள் கைது செய்யப்படும் வரைக்கும் ஆர்ப்பாட்டம் தொடரும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை -

அனுருத்த ரத்வத்தையும் அவரது மகனான றொகான் ரத்வத்தையும் கடந்த வெள்ளியன்று வெளிநாடு ஒன்றுக்குத் தப்பி ஓடிவிட்டனர் என்று ஏற்கனவே செய்திகள் வெளியாகி இருந்தன என்பது தெரிந்ததே. (க-7)



பொதுத்தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் தமிழர் கூட்டமைப்பு வேட்பாளரும் ரெலோ அமைப்பின் பிரமுகருமான எம்.கே.சிவாஜிலிங்கத்துக்கு யாழ்.ஆஸ்பத்திரி படுக்கையில் வைத்து அவரது ஆதரவாளர்கள் மலர் மாலை சூடி வாழ்த்துத் தெரிவித்தபோது எடுக்கப்பட்ட படம்.

தீவகப் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலின்போது அவருடன் காயமடைந்த நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவும் அருகில் காணப்படுகிறார். (ஐ)

## யாழ்.இந்துவில் கணனிப் பயிற்சி

யாழ்ப்பாணம்,டிசெ.10

யாழ்.இந்துக் கல்லூரி மாணவர்களுக்கான கணனிப் பயிற்சி வகுப்புகள் மீண்டும் ஆரம்பமாக உள்ளதாக அதிபர் அ.சிறிகுமரன் அறிவித்துள்ளார்.

தரம் 6,7,8,9 வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களை இன்று திங்கட்கிழமை கல்லூரிக்குச் சமுகமளித்து பயிற்சிக்கான பதிவினை மேற்கொள்ளுமாறும் அவர் கேட்டிருக்கிறார்.(ஐ).

## இருவர் கைது!

மடவளப் பிரதேச முஸ்லிம் இளைஞர்கள் 10 பேரின் கொலை தொடர்பாக இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

சமாதானத்தையும் அமைதியையும் நிலைநாட்ட மடவள ஜும்மா பள்ளிவாசல் நிர்வாகிகள் மிகுந்த பிரயத்தனம் எடுத்துவருகின்றனர்.

## தனது ஆதரவாளர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றார் சிவாஜிலிங்கம்

### ஆஸ்பத்திரியில் இருந்து அவர் செய்தி

யாழ்ப்பாணம்,டிசெ.10

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட ரெலோ அமைப்பின் மூத்த உறுப்பினரான எம்.கே.சிவாஜிலிங்கம் தன்னை வெற்றிபெறச் செய்த மக்களுக்கு நன்றி தெரிவித்து அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நடந்து முடிந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் நான்கு கட்சிகளின் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட ரெலோ அமைப்பின் பிரதிநிதியான என்னையும் ஒரு நாடாளுமன்றப் பிரதிநிதியாகத் தெரிவு செய்தமைக்கு என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ்த்தேசத்தினதும் தமிழ் இனத்தினதும் விடுதலையைநோக்கி ஒரு தெளிவான நிலைப்பாட்டை முன்வைத்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், தமிழீழ விடுதலை இயக்கம், ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஸ் அணி) ஆகிய அமைப்புக்கள் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் கொழும்பிலும் போட்டியிட்டது. சந்திரிகா அரசின் ஏஜென்டுகளின் அடாவடித்தனத்தினாலும், காடைத்தனத்தினாலும் நசுங்குண்டிருந்த எம் மக்கள் தேர்தலை ஒரு வாய்ப்பாகக் கருதி வாக்களித்துள்ளனர்.

அரச கைக்கூலிகளின் அடிமைப் பிரதேசமாக விளங்கிய தீவகத்தை மீட்பதில் பெருமுயற்சி மேற்கொண்டோம். அம்முயற்சியில் எம் அமைப்பின் உறுப்பினரான கமல்ஸ்ரோனினதும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவாளர் பேரம்பலத்தினதும் மதிப்பார்ந்த அரிய உயிர்களை இழந்தோம்.

அத்துடன் நான், மாவை சேனாதிராசா உட்பட சுமார் இருபது பேர் கடும் காயங்களுக்குள்ளானோம்.

அது மட்டுமல்லாது வாகனங்களும் அடித்து நொறுக்கப்பட்டன. இந்த நிலையிலும் தீவக மக்களில் 4000இற்கு மேற்பட்டவர்கள் தமது வாக்குகளை அளித்துத் தமது ஆதரவைக் காட்டியமை குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

தேர்தலுக்கான நியமனப்பத்திரம் தாக்கல் செய்து 10 நாள்களின் பின்னர் தொடர்ச்சியாக வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, கொழும்பு, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் கூட்டமைப்பிற்கான பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தேன். யாழ்ப்பாணம் திரும்பியபின் 28 ஆம் திகதி சுரமடனில் அரச கைக்கூலிகளின் தாக்குதலினால் கடும் காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் இருந்தேன். அந்த நிலையிலும் என்னைப் பெருவெற்றிபெற வைத்துள்ளார்கள் மக்கள்.

தமிழர் கூட்டமைப்பினது வெற்றிக்காகவும் எனது வெற்றிக்காகவும் பலவிதங்களிலும் பேருதவி புரிந்த சகல அமைப்புக்களுக்கும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் பல்கலைக்கழக மாணவசமூகத்திற்கும், கூட்டமைப்பின் உறுப்பினர்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். என்னை வைத்தியசாலைக்கு வந்து நலம் விசாரித்த அன்பு நெஞ்சங்களுக்கும், ஆசி கூறி வாழ்த்துக் கூறிய அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் - என்றுள்ளது. (ம)


## ஸ்ரீ வல்லிபுரா போட்டோ

நாளை (11-12-2001) செவ்வாயன்று புகைப்படச்சுருள்களும் வீடியோ கசற்றுகளும் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படும்.

புலோலி. 070 212720 (95760) நல்லூர். 021-2604


## கண்ணீர் அஞ்சலி

### திருமதி சௌந்தரநாயகி சரவணபவானந்தன்

(ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/வேம்படி மகளிர் கல்லூரி)

அவர்கள் 07.12.2001 இல் காலமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு அவரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
ஆசிரியர் அல்லாத ஆளணியினர்
யா/வேம்படி மகளிர் கல்லூரி

(C/10091)

## கண்ணீர் அஞ்சலி

எமது காரியாலயத்தில் 20 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றி வருகின்ற

### திரு.சின்னத்தம்பி யோகேஸ்வரன்

அவர்கள் 01.12.2001 இல் காலமானதையிட்டு துயரடைவதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிராந்திய முகாமையாளர்,
சக உத்தியோகத்தர்கள்.
இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (வரை.) யாழ்ப்பாணம்.

(95747)

### தேர்தல் வன்முறை

## பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நஷ்டஈடு வழங்கப்படும்!

### கரு ஜெயசூரிய கூறுகிறார்

கொழும்பு,டிசெ.10

நடந்து முடிந்த பொதுத்தேர்தலையொட்டி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் - கட்சிப்பாகுபாடின்றி நஷ்டஈடு வழங்கப்படும் என்று ஐ.தே.கட்சி பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்து ஆரம்பமான வன்முறைகள் தேர்தல் முடிந்த பின்னரும் கூட இடம்பெற்றன. முன்னர் எமது கட்சிக்காரர்களுக்காக மட்டுமே குரல் எழுப்பினோம். ஆனால் தற்போது பொறுப்புள்ள அரசாங்கக் கட்சி என்ற வகையில் இந்த நாட்டு மக்கள் அனைவருக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டியது எமது கடமை.

"தேர்தல் வன்முறைகளில் ஐ.தே.கட்சி, பொ.ஐ. முன்னணி உட்பட பல அரசியல் கட்சிகளைக் சேர்ந்தவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே அவர்கள் அனைவருக்கும் இழப்பீடுகளை வழங்க ஐ.தே.கட்சி மேலிடம் முடிவுசெய்துள்ளது".

- என்று கரு ஜெயசூரிய தெரிவித்தார். (ம)

## பாதை இன்று மீண்டும் திறப்பு

வவுனியா,டிசெ.10

கடந்த 5 ஆம் திகதி தேர்தல் தினத்தன்று மூடப்பட்ட வவுனியா பிரமணாளங்குளம் சோதனைச் சாவடி இன்று மீண்டும் போக்குவரத்துக்குத் திறந்து விடப்பட்டுள்ளது.

இந்தப் பாதையை பாதுகாப்புக் காரணங்களுக்காக மூடுவதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருந்ததும்-

தேர்தல் தினத்தன்று இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதி மக்கள் வவுனியாவுக்கு வந்து வாக்களிப்பதற்கு இராணுவம் அனுமதி மறுத்திருந்ததும் - குறிப்பிடத்தக்கது. (ம)

## மரண அறிவித்தல்கள்

### முருகன் சின்னத்துரை

அச்சுவேலி தெற்கு, விஷ்ணு வீதியைச் சேர்ந்த முருகன் சின்னத்துரை நேற்று (2001.12.09) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும் சண்முகம், நாகமுத்து, பாக்கியம், தம்பிராசா, இளையதம்பி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சகுந்தலாதேவி, சதானந்தம்,(சோபியா திரையரங்கு - ஆவரங்கால்), சந்திரன் (லண்டன்), பாஸ்கரன் (ரமீனா வீடியோ சென்ரர் - ஆவரங்கால்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் குணராசா (லண்டன்), விஜிதா, சுகிந்தா ஆகியோரின் மாமனாரும் தங்கம்மாவின் மைத்துனரும், தர்சிகா, தாரணியா, நரேஸ்கண்ணா, சோபியா, ரமீனா, கவிவர்மன், கிருசாந் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று- (2001.12.10) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் 1.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முழக்கன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*விஷ்ணு வீதி,*
*அச்சுவேலி தெற்கு,*
*அச்சுவேலி.*

தகவல்:-
சி. சதானந்தம் (கடவுள்)
(மகன்)

(95762)

### திருமதி ஜெயலட்சுமி பாலசுப்பிரமணியம்

திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஜெயலட்சுமி பாலசுப்பிரமணியம் 07-12-2001 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் சச்சிதானந்தன் (சேவிஸ் ஸ்டேசன், கோப்பாய்) - சரோஜினி தேவி தம்பதிகளின் பாசமிகு மகளும், கந்தையா - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும் கந்தையா பாலசுப்பிரமணியத்தின் (ஓய்வூதியர், விலைமதிப்பீட்டு திணைக்களம்) அன்பு மனைவியும், பிரசாத் (கொழும்பு), திருமதி ஜெசிந்தியா செல்வமனோகரன், உருத்திரா ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வமனோகரனின் (யா/பல்கலைக்கழகம்) மாமியாரும் ஜெகதீஸன், மனோகரன் (லண்டன்), அமரர் தயாபரன், துஷ்யந்தன் (கொழும்பு) ஆகியோரின் சகோதரியும், ரேணுகாதேவி, தனரஞ்சினி, சியாமளா ஆகியோரின் மைத்துனியும், உமாசங்கரி, உதயன், டமேஷா, பானுஜா, நிஷாந்தன் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10-12-2001) திங்கட்கிழமை மாலை 3.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*141, கேணியடி,*
*திருநெல்வேலி.*

தகவல்:
க.பாலசுப்பிரமணியம்.
(ஓய்வூதியர், விலை மதிப்பீட்டு திணைக்களம்)

(95765)

## தெற்கில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருப்பதால்

# சமாதானப் பேச்சை எதிர்பார்த்து புலிகள் அமைதி பேணுவார்கள்!

### ஆங்கில வார இதழ் தகவல்

கொழும்பு,டிசெ.10

தெற்கில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருப்பதை அடுத்து, சமாதானப் பேச்சுக்கள் அடுத்த மாதம் - புதிய வருடத்தில் - ஆரம்பமாகும் என எதிர்பார்க்கும் விடுதலைப் புலிகள், அதன் காரணமாக படையினருக்கு எதிராகப் பெரிய தாக்குதல் நடவடிக்கைகள் எதற்கும் தயாராகாமல் அமைதி பேணுவார்கள் என்று வன்னித் தகவல்களை மேற்கோள்காட்டி ஆங்கில வார இதழ் ஒன்று நேற்று செய்தி வெளியிட்டது.

புதிதாகப் பதவியேற்கும் ஐ.தே. கட்சி அரசு சமாதானத்துக்கான முன் முயற்சிகளை ஸ்திரமாக எடுப்பதற்கு வசதியாக கிறிஸ்மஸ், புதுவருடம், தைப்பொங்கல் ஆகிய பண்டிகைக் காலங்கள் முடியும் வரை கால அவகாசம் வழங்கி, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் பொறுத்திருப்பார் எனத் தெரிகின்றது.

சமாதானத்துக்கான முதல் நடவடிக்கைகளைப் புலிகளே ஆரம்பிப்பார்களா என்பது தெரியவில்லை. அனேகமாக அரசே ஆரம்பிக்கட்டும் என்று அவர்கள் பொறுத்திருப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இரண்டு வருட காலமாக விடுதலைப் புலிகளுக்கும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கும் இடையில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தராகச் செயற்பட்டு, தனது முயற்சியில் வெற்றியடையாமல்போன நோர்வே இம்முறையும் தனது பணிக்கு அழைக்கப்படுமா என்பது தெரியவில்லை. எனினும் அதற்கு வாய்ப்புகள் மிகமிகக் குறைவாகவே உள்ளன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி இந்தத் தேர்தலில் - மீண்டும் - வெற்றி பெற்றிருந்தால், உடனடியாக யாழ்ப்பாணம் மீது பெருந் தாக்குதலை நடத்தப் புலிகள் எண்ணியிருந்தனர். அதற்காக கடந்த ஏழு மாதங்கள் மந்த நிலையில் இருந்த யுத்த நிலைமையைப் பயன்படுத்தி, குடாநாட்டைச் சுற்றி பெரும் படைக்குவிப்பை புலிகள் மேற்கொண்டு வந்திருந்தனர்.

இனிமேலும், சமாதான முயற்சிகளுக்கு மத்தியில் இராணுவம் போர் முனைப்பில் தீவிரமாக இருக்காது என்ற சூழ்நிலையை நன்கு பயன்படுத்தி அடுத்த சில மாதங்களுக்கு கப்பல் கப்பலாக ஆயுதங்கள் மற்றும் யுத்த தளபாடங்களைக் கொண்டு வந்து குவிப்பதில் புலிகள் தீவிரமாக இருப்பார்கள் என்பது நிச்சயம்.

ஆட்சி மாற்றத்தை அடுத்து - பாதுகாப்பு அமைச்சர், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர், படைத் தளபதிகள், படை உயரதிகாரிகள், பொலீஸ் மா அதிபர் போன்ற - பாதுகாப்புடன் தொடர்புடைய பதவி நிலைகளில் பெரும் மாற்றங்கள் வரலாம் என எதிர்பார்க்கப்படுவதால் அதனை எதிர்பார்த்துப் புலிகள் காத்திருப்பதாகவும் தெரிகின்றது.

சமாதான முயற்சிகளுக்கான ஆயத்தங்கள் பூர்த்தி என்பதால் மூத்த படை அதிகாரிகளும் போர் முனைப்போடு தமது படைகளை நடத்தமாட்டார்கள் என்பது புலிகளுக்குத் தெரியும். இதுவும் இப்போதைக்குப் புலிகளுக்கு வாய்ப்பான அம்சமே.

- இப்படி அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

(உ)

### வடமராட்சிப் பகுதி கடைகளில் மா விற்பனை

தென்மராட்சி,டிசெ.10

வடமராட்சிப் பிரதேசத்தில் மாவுக்கு நிலவிய தட்டுப்பாடு ஓரளவு குறைந்துள்ளது. தனியார் வர்த்தக நிலையம் ஒன்றுக்கு மாவு வந்துள்ளதை அடுத்து வடமராட்சிப் பகுதிக் கடைகளில் மா கிலோ 24 ரூபா வீதம் விற்கப்படுகிறது.

இதேவேளை இப்பகுதியில் உள்ள பேக்கரிகளுக்கு வழங்குவதற்குரிய மா ப.நோ.கூ. சங்கங்களுக்கு வந்துள்ளதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (க-117)

### பயிற்சிநெறி

யாழ்ப்பாணம்,டிசெ.10

யாழ்.மாவட்டத்திலுள்ள கால்நடை வைத்தியசாலைகளில் கால்நடைகளுக்கான தனிப்பட்ட செயற்கை முறைச் சினைப்படுத்தும் தொழில் நுட்பவியலாளர்களுக்கான ஒருநாள பயிற்சிநெறி வகுப்பு எதிர்வரும் வியாழக்கிழமை காலை 9மணிக்கு யாழ். மாவட்ட கால்நடை வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெறும்.

இந்தப் பயிற்சிநெறியில் செயற்கை முறைச் சினைப்படுத்தும் தொழில் நுட்பவியலாளர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொண்டு பயன் பெறுமாறு யாழ்.மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் பொ.இராமநாதன் தெரிவித்தார். (க-180)

### பாராட்டு விழா

சுழிபுரம்,டிசெ.10

தொல்புரம் வழக்கம்பரை அம்பாள் ஆலயத்தில் காசி காண்ட புராண படனம் நிகழ்த்திவரும் பௌராணிகர்கள் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்தப் பாராட்டு விழா எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. (க-7-28)

### பரீட்சை முடிவுகள்

தொலைக்கல்வி ஆசிரியர்களுக்காக 2000ஆம் ஆண்டு இடம்பெற்ற பகுதிII பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

பரீட்சை முடிவுகளை அலுவலக தினங்களில் யாழ்.இந்துக் கல்லூரியில் உள்ள தொலைக்கல்வி நிலையத்தில் உரியவர்கள் பார்வையிட முடியும்.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றியவர்கள் அனைவரும் சித்தி அடைந்துள்ளார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (க-86)

### சாந்திகத்தில் இன்று மனித உரிமைகள் தின நிகழ்வுகள்

வலி.வடக்கு,டிசெ.10

சர்வதேச மனித உரிமைகள் தினம் தொடர்பான நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கச்சேரி - நல்லூர் வீதியில் அமைந்துள்ள சாந்திகம் உளவளத்துணை நிலையத்தில் க.கனகரத்தினம் தலைமையில் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி இடம்பெற்ற போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (க-86)

# தொலைத்தொடர்பு வசதிக் குறைபாடே முடிவுகள் தாமதமானதற்குக் காரணம்

### யாழ்.உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.10

கடந்த புதன்கிழமை நடைபெற்று முடிந்த 12ஆவது பொதுத் தேர்தலில் யாழ்.மாவட்ட முடிவுகளை விரைவில் உத்தியோகபூர்வமாக அறிவிக்க முடியாமைக்கு தொலைத்தொடர்பு வசதிகளிலுள்ள குறைபாடே காரணமென்று யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ்.நடராஜா உதயனுக்குத் தெரிவித்தார்.

தேர்தல் ஆணையாளர் அலுவலகத்துடனோ அல்லது உதவித் தேர்தல் ஆணையாளர் அலுவலகங்களுடனோ தொடர்புகளை ஏற்படுத்தி முடிவுகளை அறிவிப்பதற்கும் 'பக்ஸ்' மூலம் அவற்றை அனுப்பி பெறுவதற்கும், உடனடியாக தொலைத்தொடர்புகளை ஏற்படுத்தமுடியவில்லை. இதனால் முடிவுகளை உடன் வெளியிடுவதும் சாத்தியமில்லாது போயிற்று.

தொலைத்தொடர்பு வசதிகள் இலகுவாகக் கிடைத்திருந்தால் தேர்தல் தொடர்பான யாழ்.மாவட்டத்தின் சகல உத்தியோகபூர்வமான முடிவுகளையும் தேர்தலுக்கு மறுநாளான கடந்த வியாழக்கிழமையே அறிவித்திருக்க முடியும்.

- எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-10)

### ஈ.பி.டி.பியின் எம்.பிக்கள் தெரிவு

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் மூலம் ஈ.பி.டி.பி. சார்பில் யாழ்.மாவட்டத்திலிருந்து இரண்டு உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். இந்த இரண்டு இடங்களுக்கு ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, எஸ்.தவராசா ஆகியோரை அக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவுசெய்துள்ளதாகத் தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஐ-6)

# ரணிலைச் சந்தித்து கூட்டமைப்பினர் 5 கோரிக்கைகளை வலியுறுத்துவர்!

### செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.10

ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் தலைவர்கள் விரைவில் சந்தித்து ஐந்து கோரிக்கைகளை வலியுறுத்தவுள்ளனர் என்று வன்னி மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ முதல்வருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும், வடக்கு கிழக்கில் பொருளாதார தடையை நீக்க வேணடும், போர்நிறுத்தம் செய்யவேண்டும், விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சினை ஆரம்பிக்கவேண்டும், மூன்றாம் தரப்பு மத்தியஸதத்துடன் பேச்சுக்களை நடத்த வேண்டும் ஆகிய ஐந்து கோரிக்கைகளை முன்வைத்தே நாங்கள் தேர்தலில் போட்டியிட்டோம். இதறகு மக்கள் அமோக ஆதரவை வழங்கியிருக்கிறார்கள் எனத் தெரிவித்த செல்வம் அடைக்கலநாதன், தமிழ் மக்களின் இந்த ஆணையை ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தவுள்ளோம் என்றும் கூறினார்.

தேர்தல் காலத்தில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி மிகமோசமான முறையில் இனவாத பிரசாரத்தை மேற்கொண்டிருந்தது. புலிகளுக்கு ரணில் நாட்டைப் பிரித்துக் கொடுக்கப் போகிறார்; புலிகளுடன் அவர் ரகசிய ஒப்பந்தத்தை செய்திருக்கிறார் என்றெல்லாம் பிரசாரம் செய்யப்பட்டபோதிலும் கூட சிங்கள மக்கள் இனப் பிரச்சினையை சமாதானப் பேச்சுக்கள் மூலம் தீர்க்கவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆணை வழங்கியிருக்கிறார்கள். எனவே ரணில் விக்கிரமசிங்க புதிய அரசாங்கத்தை அமைத்ததும் உடனடியாக போர்நிறுத்தத்தை அறிவித்து, தடையை நீக்கி விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டும் என்பதை நாங்கள் வலியுறுத்துவோம் என்று செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் தமிழர் கூட்டமைப்பின் பலம் மேலும் அதிகரிக்குமே தவிர பிளவுகள் எதுவும் ஏற்படாது. கூட்டமைப்புக்குள் வராது வெளியில் இருப்போரும் எமது இலட்சியத்துடன், கொள்கைகளுடன் இணைந்துகொளவார்கள் என்றார்.

இதேவேளை -

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர்களில் ஒருவருமான ஆர்.சம்பந்தன், தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பின் எதிர்காலம் பற்றிக் கூறியதாவது:-

நாங்கள் ஒரே சக்தியாக தொடர்ந்து செயற்படுவோம். தமிழ் தேசிய கூட்டமைப்பு தீர்க்கமான திடமான கொள்கைகளைக் கொண்டு இணைந்திருக்கிறது. ஒரே கொள்கையின் அடிப்படையில் இணைந்திருக்கும் எங்களுக்குள் எந்தப் பிளவுக்கும் இடமில்லை - என்றார்.

(ம)

# இறை சிந்தனையின்றி வாழ்வது வெறும் ஜட நிலையே!

### சஞ்சிகை வெளியீட்டு விழாவில் உரை

ஆன்மீகநெறி நின்று வாழும் வாழ்க்கையே வாழ்க்கை. இறைசிந்தனையின்றி வாழ்வதென்பது வெறும் ஜட நிலையே.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம்.

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவையினால் மாதாந்தம் வெளியிடப்படும் "ஞானச்சுடர்" சஞ்சிகையின் வெளியீட்டுவிழா அண்மையில் பேரவை மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

நம் முன்னோர்கள் இறைபக்தியைப் பேணி நின்றமையினால்தான் அவர்களுடைய நாமம் இன்றும் பல வழிகளிலும் போற்றப்படுகின்றது.

சைவ சமய நிறுவனங்கள் ஆன்மீகத்தையும், இறை சிந்தனையையும் வளர்க்கும் நூல்களை வெளியிட வேண்டும். இதன் மூலமே புதியதோர் எழுச்சிமிக்க சமுதாயத்தை ஏற்படுத்த முடியும்.

'ஞானச்சுடர்' சஞ்சிகை ஆற்றிவரும சேவை மகத்தானதாகும். காலத்தின தேவையை உணர்ந்து தொண்டமனாறு சைவ கலைபண்பாட்டுப் பேரவையினர் இந்தச் சேவையை புரிந்து வருகின்றனர்.

சைவ சமயத்தவர்கள் ஒவ்வொருவரும் ஞானச்சுடரைப் படித்துப் பயன் பெற வேண்டும் - என்றார்.

சைவ கலை பண்பாட்டுப் பேரவைத் தலைவர் சிநாகலிங்கம் வெளியீட்டு விழாவுக்குத் தலைமை வகித்தார். (க-7)

# திஸநாயக்காவை கிரனேட் லோஞ்சர் மூலம் தாக்கிக் கொலை செய்வதற்கு சதி முயற்சி!

### ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினர் இருவர் உட்பட 9 பேர் கைது

பொதுத் தேர்தலுக்கு மூன்று தினங்களுக்கு முன்னர் ஐக்கிய தேசிய முன்னணியின் பிரமுகர் எஸ்.பி.திஸநாயக்காவை கிரனேட் லோஞ்சர் மூலம் தாக்கிக் கொலை செய்வதற்கு எடுக்கப்பட்ட சதி முயற்சி ஒன்றை பொலீஸார் முறியடித்திருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

இந்த சதித் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு கொண்டுவரப்பட்டதாகக் கூறப்படும் கிரனேட் லோஞ்சர், அதில் பொருத்தி ஏவுவதற்கான பத்துக் கிரனேட்டுகள், பிறவுணிங் தானியங்கி பிஸ்டல்கள் - மூன்று, சீனத் தயாரிப்பு ரி-56 துப்பாக்கிகள் - நான்கு, எம்.பி.5 ரகத் துப்பாக்கி - ஒன்று, வேறு இரண்டு பிஸ்டல்கள் என்பன பொலீஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தச் சதித்திட்டத்தை நிறைவேற்றும் பணிக்கு அமர்த்தப்பட்டிருந்தவர்களான - ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த ஒரு பொலீஸ் சார்ஜன்ட், ஒரு கான்ஸ்டபிள், இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த சார்ஜன்ட் ஒருவர் மற்றும் ஒரு கோப்ரல், ஒரு சாதாரண சிப்பாய் மற்றும் இராணுவத்தை விட்டு ஓடிய நால்வர் என ஒன்பது பேர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு கண்டி நீதிவானின் உத்தரவின் பேரில் எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கின்றார்கள்.

கடந்த மூன்றாம் திகதி மதுரட்ட பொலீஸ் பிரிவில் உள்ள பதியப்பெலல்ல என்ற இடத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் - எஸ்.பி.திஸநாயக்கா, ரேணுகா ஹேரத் ஆகியோர் பேசிவிருந்த கூட்டத்தில் - கூட்ட மேடையை நோக்கித் தாக்குதல் நடத்தி எஸ்.பி.திஸநாயக்காவையும் ஏனையோரையும் தீர்த்துக் கட்ட முயற்சி எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

கூட்டம் நடைபெற்ற இடத்தை நோக்கி முன்னேறிய இரண்டு 'லாண்ட் குருஸர்' வாகனங்களை பொலீஸார் சந்தேகம் கொண்டு மடக்கியபோதே இச்சதித்திட்டம் பற்றிய உண்மை அம்பலத்துக்கு வந்ததாகக் கூறப்படுகின்றது.

இரண்டாவது 'லாண்ட் குருஸர்' வாகனத்தில் வந்தோர் ஐ.தே.கட்சி வேட்பாளர்களின் வாகனங்களை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்த சமயம், ஆயுதம் தாங்கிய பொலீஸாரால் சுற்றிவளைத்து மடக்கப்பட்டனர்.

பின்னர் வலப்பன பொலீஸாரால் நீதிவான் முன் அவர்கள் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

அந்த நபர்கள் வந்த வாகனத்தில் பொருத்தப்பட்டிருந்த இலக்கத் தகடுகளும் பொய்யானவை என்று கண்டுபிடிக்கப்பட்டது.

விசேட அதிரடிப்படைக்குச் சொந்தமான வாகனங்கள் அவை என்று முதலில் கூறப்பட்டபோதும் பின்னர் பொலீஸார் நடத்திய விசாரணைகளில் அவை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமானவை என்றும் பொய்யான இலக்கத் தகடுகளுடன் ஓடித்திரிந்தவை என்றும் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தை அடுத்து ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவு இயக்குநர் நிஹால் கருணாரத்ன, அப்பிரதேசத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ் மா அதிபர் பிராங் அல்ஸூடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டார். கைது செய்யப்பட்ட ஆள்களை விடுவிக்கும்படி கோரினார். பொலீஸ் அதிகாரி மறுக்கவே தனது பிரிவைச் சேர்ந்த மூவாயிரம் பேருடன் வந்து வலப்பன பொலீஸ் நிலையத்தைத் தாக்கி தங்கள் ஆள்களை மீட்கப்போவதாக எச்சரித்தார். அதற்கும பொலீஸ் அதிகாரி மசியாததை அடுத்து தமக்கு அருகிலிருந்த மிகமிக முக்கியமான அரசியல் பிரமுகர் ஒருவரிடம் அவர் தொலைபேசியைக் கொடுத்தார்.

பாதுகாப்பு விடயங்களுடன் தொடர்புடைய அந்த மிக முக்கிய அரசியல்வாதி, சம்பந்தப்பட்ட பொலீஸ் அதிகாரியை முன்னர் ஒரு தடவை அவரது அலுவலகத்தில் தொடர்பு கொள்ளமுடியாத நிலையில் 'கிளப்' ஒன்றில் இருந்த சமயம், அந்தக் கிளப் மூலம் தொடர்பு கொண்டதை நினைவில் வைத்துக்கொண்டு "என்ன பறையா வேலை செய்கின்றாய்? எந்தக் கிளப்பில் இப்போது கூத்தடிக்கின்றாய்?" என்றெல்லாம் சிங்களத்தில் சத்தமிட்டு மிரட்டினாராம்.

எனினும் பொலீஸ் அதிகாரி விட்டுக்கொடுக்காததை அடுத்து சந்தேக நபர்கள் நீதிவான் முன் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இந்தச் சந்தேகநபர்களை மேலும் விசாரணைக்கு உட்படுத்தினால் பல புதிய - திடுக்கிடும் - தகவல்கள் வெளிவருமென பொலீஸ் தரப்பில் எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## SPOKEN ENGLISH

சுலபமான முறையில் அடிப்படையில் இருந்து ஆங்கிலம் பயில, தபால் மூலமும் வார இறுதி, மாலை வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன. ந.விகனேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (95737)

## இலக்கியக்கட்டுரைகள்

O/L மாணவர்களே! உங்கள் பாடநூல்களில் உள்ள சிறுகதைகள் 'பொருளோ பொருள்' நாடகம், "வீடற்றவன்" நாவல் எல்லாவற்றுக்கும் விளக்கங்களும், விமர்சனமும் எழுதியிருக்கிறார் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை. படித்துப் பயனடையுங்கள். (95715)

## விற்பனைக்கு

ORIGINAL JAPAN SONY, NATIONAL T.V., VIDEO DECK, AUDEO SET, BOX என்பன உத்தரவாதத்துடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 142, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (95718)

பிறிமாப் பேட்டுக்குஞ்சுகள், புறோயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. முன் கூட்டியே பதிவு செய்தவர்களும், தேவைப்படுவோரும் தொடர்பு கொள்க: வி.குணபாகன், இல.4, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி; இல.1014, கே.கே.எஸ். வீதி, (பெரியபுலம் பாடசாலை முன்பாக). T.P. 3353. (95741)

## மணமக்கள் தேவை

யாழ்.றோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த பட்டதாரி மணமகளுக்கும், பொறியியலாளராகக் கடமையாற்றும் மணமகனுக்கும் மணமக்கள் தேவை. தொடர்பு: எஸ்.ஏ.தர்மலிங்கம், இல.40, பாரதி லேன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (95730)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 28 வயதுடைய, செவ்வாய் தோஷமற்ற, அரச உத்தியோகத்தர் மணமகனுக்கு அழகிய படித்த மணமகள் தேவை. குறிப்பு உள்ளடங்கலாகத் தொடர்பு கொள்ளவும். விள.இல.1414, மே/பா, உதயன். (95710)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 25 வயதுடைய, 28 கிரக பாவம் உள்ள பட்டதாரி ஆசிரியருக்கு தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர். குடும்ப விவரம் ஜாதகக் குறிப்பு என்பனவற்றுடன் தொடர்பு: விள.இல.1413, மே/பா, உதயன். (95709)

## மாநகர சபையின் இறுதிக் கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.10

யாழ்.மாநகர சபையின் இவ்வாண்டுக்குரிய (2001) இறுதிக் கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மாநகர சபையின் பிரதான மண்டபத்தில் மாநகர சபையின் மேயர் என்.இரவிராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் புதிய ஆண்டுக்குரிய (2002) வரவு - செலவுத் திட்டம் ஏற்று அங்கீகரிக்கப்படவுள்ளது. (க-180)

## மா விநியோகம் தொடர்பான கலந்துரையாடல்

மா விநியோகம் சம்பந்தமான அவசர கலந்துரையாடல் யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாச அலுவலகத்தில் இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவிருப்பதாக சமாசத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் அறிவித்துள்ளார்.

சகல ப.நோ.கூ.சங்கங்களினதும் தலைவர்கள், பொது முகாமையாளர்களை இக்கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு அவர் கேட்டிருக்கிறார். (ஐ)

## பதவி வெற்றிடம்

கீழ்க்காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★தரம் 3 தொடக்கம் O/L வரையுள்ள பாடங்கள் கற்பிக்கக்கூடிய பகுதிநேர ஆசிரியர்கள் (பாடங்களைக் குறிக்கவும்)

★லிகிதர்/அலுவலக உதவியாளர்

**விண்ணப்பங்களை 20.12.2001க்கு முன் சமர்ப்பிக்கவும்.**

*மார்ட்டின் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (95743)

- நிர்வாகி,
நியூ பிறைற் கல்வி நிலையம்.

## நன்றியுடன் வாழ்த்துகின்றோம்

**நாவாந்துறை புதிய புனித மரியாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க புனரமைப்புக்கு ரூபா இரண்டு லட்சத்தை ஒதுக்கி உடன் ஒரு லட்சம் ரூபாவைத் தந்துதவியவர்களான**



*ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் முன்னாள் அமைச்சருமான*

திரு.K.N.டக்ளஸ் தேவானந்தா

அவர்களுக்கும் -



*முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்*

திரு.கே.வி.குகேந்திரன் (ஜகன்)

அவர்களுக்கும் -

தோழர்கள் கேதீஸ் (மனோ)

இளங்கோ (றீகன்) (மாநகர சபை உறுப்பினர்)

ஆகியோருக்கும்

**அவர்கள் சேவை சிறக்க எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

நன்றி
நாவாந்துறை புதிய புனித மரியாள்
கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்.

(95742)

## இதோ! வந்துவிட்டன - விற்பனைக்கு

2002 ஆம் ஆண்டுக்கான
கண்கவர் வண்ணப்படங்களுடன்
கொம்பிளிமென்ற் கலண்டர்கள்
விற்பனைக்கு வந்துவிட்டன.

தொடர்பு:-

**பட்டாரி படமாடம்**

இல.64, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(95751)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 15 - 06 - 1949

மறைவு 10 - 12 - 1999

அமரர்

### சின்னத்தம்பி இராசலிங்கம்

(ரிங்கர் பூச்சி)

அன்னையும் தந்தையுமாய்
ஆளாக்கி வைத்தாய் - உன்
இலட்சியம் தீரும் முன்
ஈடில்லா துயரம் தந்தாய்
தண்ணீர் வளர்த்த பயிர் நாங்கள்
தரணியில் சாய்வதில்லை
உன் கனவுக்கு அர்ச்சனை
மலர்தூவி வழிநடப்போம்.

*பாடசாலை வீதி,*
*ஆறுகால் மடம்,*
*ஆனைக்கோட்டை.*

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், மைத்துனர்கள்,
பெறாமக்கள், மருமக்கள்.

(95748)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கூட்டுறவுச் சேவையே தம் குறிக்கோளாகக் கொண்டு அத்துறைக்கு அளப்பரிய சேவைகள் ஆற்றி, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகப் பதவி உயர்வு பெற்ற

திரு.பொ.சிவலிங்கம்
திருமதி யோகா செல்வரத்தினம் ஆகியோரையும்

அதே பணியில் தம்மை அர்ப்பணித்து மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகப் பதவி உயர்வு பெற்ற

திரு. நா.தவநாதன்
திரு. செ.திருச்செல்வம்
திரு. கு.குமாரகுருலிங்கம் ஆகியோரையும்

மேன்மேலும் சேவை பல புரிந்து சிறப்படைய வேண்டுமெனப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.**
- தலைவர்,
பணிப்பாளர்கள், பணியாளர்கள். (C-19687)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 29 ☆ 03 ☆ 1950



உதிர்வு 10 ☆ 11 ☆ 2001

### அமரர் B.M.எட்வேட்

B.Sc. (Hons) Cey. SLPS - I

(அதிபர் - யா/நல்லூர் ஆனந்தா வித்தியாலயம்)

*மாதங்கள் மறைந்தாலும்*
*வருடங்கள் நகர்ந்தாலும்*
*ஆறாது எம் சோகம்*
*அகலாது உம் நினைவு!*

எமது குடும்பத் தலைவர் B.M. **எட்வேட்** அவர்களது திடீர் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்து எமக்கு அனுதாபம் தெரிவித்த யாழ். ஆயர், யாழ். மறைமாவட்ட குருமுதல்வர், குருக்கள், கன்னியர்கள், குருமட மாணவர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள், தமிழர் ஆசிரியர் சங்கத் துணைச் செயலாளர், புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்க அங்கத்தவர்களுக்கும் மற்றும் சகலவிதமான உதவிகளையும் செய்த நண்பர்கள், அயலவர்கள், உறவினர்களுக்கும், மலர்மாலை, மலர்வளையம் வைத்துப் பத்திரிகைகள் மூலம் கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், தொலைபேசி மூலமும், கடிதங்கள் மூலமும் அனுதாபம் தெரிவித்த வெளிநாடுகளிலுள்ள உறவினர், நண்பர்களுக்கும் மரணச் சடங்கில் கலந்துகொண்டவர்கள் ஆகிய அனைவருக்கும் மற்றும் வைத்தியசாலையில் உதவிகள் புரிந்த வைத்தியர்கள், தாதியர்கள், உத்தியோகத்தர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

*39, மடம் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (95745)

தகவல்:
திருமதி F.எட்வேட் (மனைவி).

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 12 - 07 - 1917



மறைவு 22 - 11 - 2000

திருமதி

### யோகம்மா நாகரத்தினம்

*திதி: 10.12.2001*

எம் குடும்பத்தின் ஒளி விளக்கே!
பாசத்தின் பிறப்பிடமே! அன்பும் பண்பும்
கொண்ட அணையாத ஜோதியே அம்மா ஆண்டுகள்!
பல சென்றாலும் அகலாது உங்கள்
இனிய நினைவுகள்..........

*சமரபாகு தேவன்குறிஞ்சி,*
*இலக்கணாவத்தை,*
*உடுப்பிட்டி.*

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(95740)


வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி!

நத்தார் - புதுவருடத்தை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை! இன்றே நாடுங்கள்!!

**லைடன் புடைவை நிலையம்** 06.12.2001 முதல் 31.12.2001 வரையும்.

சகலவிதமான புடைவைகளுக்கும் விசேட கழிவு வழங்கப்படும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

T.P. 2381

**லைடன் புடைவை நிலையம்,** 410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(C/19654)

உதயன்

## ரணிலின் ஆரம்பமே சரியில்லை!

பிரிந்து சென்று தனித் தமிழீழ அரசை அமைப்பதே இலங்கைத் தமிழர் களின் அபிலாஷை என்ற ஏகோபித்த முடிவை - தீர்மானத்தை - முன்வைத்து 1977இல் தமிழர் விடுதலைக் கூட்டணி உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட போது 17 தொகுதிகளில் வென்று 17 உறுப்பினர்களை நாடாளுமன்றுக்கு அனுப்பியது.

சரியாக இரண்டரை தசாப்த காலத் துக்குப் பின்னர் அதேபோன்று, ஈழத் தமிழர்களின் அபிலாஷைகளை மீண்டும் ஒருதடவை பிரதிபலிக்கும் விதத்தில் - ஏறத்தாழ அதேபோன்ற ஒரு கோரிக்கை யுடன் - தமிழ் மக்களின் முன்னால் தமி ழர் விடுதலைக் கூட்டணியின் பெயரில் - உதயசூரியன் சின்னத்தில் - நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு தமிழ் மக்களன் முன் சென்றபோது பதினைந்து நாடாளுமன்ற உறுப்பினர்களை அவர் கள் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கின் றார்கள்.

இந்தத் தேர்தல் நேர்மையாகவும் நீதியாகவும் நடத்தப்பட்டிருந்தால் - வன்னியிலும் மட்டக்களப்பிலும் இராணு வக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங் களைச் சேர்ந்த மக்கள் வாக்களிப்பதற் காக இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத துக்கு வர அனுமதிக்கப்பட்டிருந்தால் - தெரிவுசெய்யப்பட்ட தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களின் எண்ணிக்கை பதினெட் டையும் தாண்டியிருக்கும்.

இராணுவ அதிகாரிகளின் - திட்ட மிட்ட - ஜனநாயக விரோத நடவடிக் கையால் வன்னியிலும் மட்டக்களப்பிலும் ஆகக் குறைந்தது தலா ஒவ்வோர் உறுப்பினர்களையும் தேசியப் பட்டியலில் இரண்டாவது உறுப்பினரையும் தெரிவு செய்யும் வாய்ப்பைத் தமிழ்க் கட்சிகள் கூட்டமைப்பு இழந்திருக்கின்றது என் பது தெளிவு.

ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப் பாளர்கள் உட்பட பல நடுநிலைக் கண் காணிப்பாளர்கள் இவ்வாறு தமிழ் வாக் காளர்களுக்கு ஜனநாயக வாக்களிப்பில் அநீதி இழைக்கப்பட்டிருப்பதைக் கண் டித்திருக்கின்றார்கள். இந்த மக்களுக்கு வாக்களிக்கச் சந்தர்ப்பம் வழங்கும் வித மாக மீண்டும் அங்கு வாக்களிப்பு நடத் தப்பட வேண்டும் என்று அவர்கள் வலிமை யாக வற்புறுத்தியிருக்கின்றார்கள். தமி ழர் விடுதலைக் கூட்டணியின் செயலா ளர் நாயகம் இரா.சம்பந்தனும் இதே போன்ற கோரிக்கையை எழுத்துமூலம் தேர்தல் ஆணையாளரிடம் முன்வைத் தார். ஆனால் அவை செவிடன் காதில் ஊதிய சங்கு போல ஏற்கப்படாமல் போயின.

வன்னியிலும் மட்டக்களப்பிலும் இரா ணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதே சங்களைச் சேர்ந்த மக்களுக்கு இப்படி வாக்குரிமை மறுக்கப்பட்டதை இதுவரை காலமும் எதிர்க்கட்சித் தலைவராக இருந்துவந்த ரணில் விக்கிரமசிங்கவும் கொள்கையளவில் கண்டித்தார்.

ஆனால் -

ஐக்கிய தேசியக் கட்சியினரும் அதன் தலைவரும் பொறுத்த நேரத்தில் இந் தக் கோரிக்கையை வலியுறுத்தாமல் விட்டு தமிழ்க் கூட்டமைப்பின் கோரிக்கை அடிபட்டுப்போக விட்டுவிட் டார்கள்.

ஐ.தே.கட்சி ஏன் இப்படி நடந்து கொண்டது?

வன்னியிலும் மட்டக்களப்பிலும் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பிர தேச மக்களை வாக்களிக்க அனு மதித்து, அவர்கள் வாக்களித்தால், தமிழர் கூட்டமைப்புக்கு அதிக வாக்கு கள் விழும்; அதனால் இத்தொகுதி களில் அக்கூட்டமைப்புக்கு மேலும் ஒவ் வோர் ஆசனம் கிடைக்கும்; அதனால் வன்னியில் ஐ.தே.க. பட்டியலில் போட்டி யிட்டு வெற்றிநிலையை அடைந்திருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பா ளர் ஒருவரும், மட்டக்களப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் ஒரு வரும் தங்களது வெற்றிவாய்ப்பை இழப் பர். இந்தக் காரணத்தாலேயே தமிழ்க் கூட்டமைப்புக்காக இந்த விடயத்தில் ஆதரவு வழங்கி அவர்களின் கோரிக் கைக்கு அழுத்தம் கொடுக்காமல் ஐ. தே.கட்சி பின்வாங்கியது என்று கூறப் படுகிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலை வர் ஹக்கீமின் வற்புறுத்தலும் இதன் பின்புலத்தில் இருந்ததாக விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. தன்னுடைய கூட்டணிப் பங்காளியை - முஸ்லிம் காங் கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை - அவ ரது வற்புறுத்தலை - சமாளிப்பதற்காக, அடிப்படை ஜனநாயக விழுமியங்களுக் காகக் குரலெழுப்பவேண்டிய தனது கடப்பாட்டிலிருந்து ரணில் பின்வாங்கிய தாகக் கூறப்படுகின்றது.

இது உண்மையானால் -

புதிதாகப் பதவியேற்றிருக்கும் ரணி லின் ஆட்சியின் ஆரம்பமே தமிழர்களைப் பொறுத்தவரை நம்பிக்கைக்குரியதல்ல என்றாகிவிடுகின்றது.

தமிழர்களின் கோரிக்கைகளுக்கு - நியாயமான அபிலாஷைகளுக்கு - இனப பிரச்சினைக்கு - நடுநிலை தவறாது, பல தரப்பும் ஏற்றுக்கொள்ளக்கூடிய, ஒரு தீர்வை இவரா தரப்போகின்றார் என்ற சந்தேகமும் நமது மனதில் முளைவிடத் தொடங்குகின்றது.

# நாடகங்கள், கருத்தரங்குகள் மூலம் மாணவருக்கு மிதிவெடி விழிப்புணர்வு!

## ஜனவரி முதல் ஒருவருட நிகழ்ச்சித் திட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.10

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் 'யுனிசெவ்' நிறுவனத்தின் ஆதரவுடன் மிதிவெடி விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த வுள்ளது.

பாடசாலை மாணவர்கள் மற்றும் கிராமப்புற மக்கள் மத்தியில் மிதி வெடி தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக செயற்படுத்தப் படவுள்ள இந்தத் திட்டத்திற்கான சகல உதவிகளையும் 'யுனிசெவ்' வழங்கவுள்ளது.

பாடசாலைகள் மற்றும் கிராமங் கள் தோறும் நாடக ஆற்றுகைகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்து வதன் மூலம் மக்களுக்கு விழிப் புணர்வை ஏற்படுத்துவதற்கு திட்ட மிட்டிருப்பதாகவும் -

எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம் பிக்கப்படவிருக்கும் இந்தத் திட்டம் தொடர்ந்து ஒரு வருடத்திற்கு செயற் படுத்தப்படும் எனவும் -

அகதிகள் புனர்வாழ்வு நிறுவன அதிகாரி ஒருவர் உதயனுக்கு தெரி வித்தார். (க-4)

## மயான மண்டப ஓடுகள் திருட்டு

யாழ்ப்பாணம்,டிசெ.10

இணுவில் பூவோடை இந்து மயா னத்தில் உள்ள மண்டப ஓடுகள் திரு டப்பட்டு வருவதாக ஊர்மக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

இந்த மயானம் வலி.தெற்கு பிர தேச சபையினால் அண்மையிலேயே திருத்தி அமைக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (க-4)

## கருங்குளவி தாக்கி இளைஞர் மூவர் ஆஸ்பத்திரியில்!

மழையின் போது வீழ்ந்த பனை யோலைகளில் மட்டை எடுக்கச் சென்ற மூன்று இளைஞர்கள் ஓலையொன்றுக் குள்ளிருந்து புறப்பட்ட கருங்குளவி களினால்தாக்கப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் அல்வாய்ப் பகுதியில் இடம்பெற்றது.

குளவிகளால் தாக்கப்பட்ட அல் வாய் தேவரையாளியைச் சேர்ந்த ரீ.விஜயானந்த் (வயது 23), எஸ். ஸ்ரீஸ்குமாரர் (வயது 30), எஸ்.கபூர் (வயது 20) ஆகியோர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட் டுள்ளனர். (க-117)

## ஓய்வூதிய கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,டிசெ.10

யாழ்.மாவட்ட ஓய்வூதியர்களுக் கான டிசெம்பர் மாத ஓய்வூதியத்தை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன் னர் பெற்றுக்கொள்ளுமாறு அந்தந்த பிரதேச செயலக ஓய்வூதியப் பிரி வினர் அறிவித்துள்ளனர்.

வருடக் கணக்குகள் முடிக்க வேண்டியுள்ளதால், 20ஆம் திக திக்கு முன்னர் ஓய்வூதியத்தினை வழங்கி, ஓய்வூதியம் பெற்றுக்கொள் ளாதவர்களின் விவரங்களையும் கொடுப்பனவுத் தொகைகளையும் அனுப்பிவைக்குமாறு ஓய்வூதியம் வழங்கும் வங்கிகளுக்கு அறிவிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

டிசெம்பர் மாதத்துக்குரிய ஓய்வூ தியம் நாளை செவ்வாய்க்கிழமை முதல் வழங்கப்படும் என்றும் தெரி விக்கப்பட்டது. (க-111)

## கிராமப்புற மாணவர்களுக்கு கணனிப் பயிற்சி

யாழ்ப்பாணம்,டிசெ.10

கிராமப் புறங்களிலுள்ள பாடசாலை மாணவர்கள் மத்தியில் கணனி அறி வினை மேம்படுத்தும் வகையில் அக திகள் புனர்வாழ்வு நிறுவனம் இலவச கணனிப் பயிற்சித் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தவுள்ளது.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் ஆதரவுடன் நடைமுறைப்படுத்தப்பட வுள்ள இந்தத் திட்டத்திற்கென குடா நாட்டில் பின்தங்கிய கிராமங்களி லுள்ள 8 பாடசாலைகள் முதற்கட்ட மாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின் றன.

ஒவ்வொரு பாடசாலைகளிலும் இருந்து தலா 50 மாணவர்கள் இந் தப் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட வுள்ளனர்.

6 மாத கால இந்தப் பயிற்சித் திட்டத்துக்கு சிறுவர் பாதுகாப்பு நிதி யம் நிதியுதவி வழங்கவுள்ளது. (க-4)

## நாளை

கார்த்திகை 26
செவ்வாய்க்கிழமை
திதி : ஏகாதசி
காலை 7.16 வரை.
துவாதசி
வைகறை 5.35 வரை
நட்சத்திரம்: சித்திரை
காலை 6.36 வரை.
சுவாதி
வைகறை 5.36 வரை.
ஏகாதசி விரதம்
சுபநேரம் : 10.49 - 12.19
ராகுகாலம் : 3.19 - 4.49
(பழைய நேரப்படி)

## நாட்டு நடப்பு

### நடப்பதை யார் அறிவார்?

*அம்மையின் கட்சி வேறு அண்ணலின் கட்சி வேறு*
*இம்மனி அதிகாரத்தை இழந்திடத் தயாராயில்லை*
*தம்பனி தளர்ந்ததென்று தலைமகன் திகைத்து ஏங்க*
*எம்நிலை எதுவாகும் என்று ஏங்குகிறார் தமிழரெல்லாம்.*

*இலவ மரத்தில் பழுத்த காயை இதமாக உண்ண எண்ணி*
*பல திசை இருந்து வந்த தமிழ்ப் பறவைகள் ஒன்று கூட*
*கலகலத்து காய் வெடித்து காற்றினில் பஞ்சு போக*
*நலமிகு பறவை எல்லாம் நாணியே திகைத்ததம்மா!*

*- விகடகவி.*

# கல்விச் சிந்தனைகளை எடுத்துக் கூறும் பாலர் நூல்களே காலத்தின் தேவையாகும்

## மாணவருக்கான பாடல் நூல் வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம்,டிசெ.10

காலத்தின் தேவைக்கேற்ப புதிய கல்விச் சிந்தனைகளை எடுத்துக் கூறும் பாலர் நூல்களே தேவை. இதுவே காலத்தின் தேவையுமாகும்.

இவ்வாறு கூறினார் யாழ்பல்கலைக் கழக நுண்கலைப் பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர் சபா.ஜெயராஜா.

ஆரம்பக் கல்வி மாணவர்களுக் கான "எப்படிக் கற்போம்" என்ற பாடல் தொகுதி நூலின் வெளியீட்டு விழா அண்மையில் கோப்பாய் ஆசிரி யர் பயிற்சிக் கலாசாலை மண்டபத் தில் நடைபெற்றது. இந்த விழாவில் கலந்துகொண்டு வெளியீட்டுரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பேராசிரியர் சபா.ஜெயராஜா தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் அறிமுகப்படுத்தப் பட்ட புதிய கல்விச்சீர்திருத்தம் தென்னிலங்கையில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் வேளை, எம்பிரதேசத் தில் அவற்றைப் பூரணமாக உள்வாங்க முடியாமல் கற்றல் கற்பித்தல் வேறு திசை நோக்கிச் சென்று கொண்டிருக் கும் இந்த வேளையில் காலத்தின் தேவைக்கேற்ப புதிய கல்விச் சிந் தனைகளைத் தாங்கிய இந்நூல் வெளி வந்திருக்கின்றது.

செயல் மூலம் கற்றல், செயல் மூலம் கற்பித்தல், நவீன புதிய எண் ணக் கருக்களை எடுத்துரைத்தல் போன்றவற்றைக் கவிதைகளாக வடித் துக் கற்றல், கற்பித்தல் உத்திகளோடு ஆக்கப்பட்ட செல்வி மலர் சின்னையா வின் "எப்படிக் கற்போம்" என்னும் நூல் நவீன கற்றல் சிந்தனைக்காக ஏங்கி நிற்கும் கல்விச் சமுதாயத் திற்கு ஒரு வரப்பிரசாதமாகும் - என் றார்.

ஆய்வுரை நிகழ்த்திய பலாலி ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் அதிபர் சோ.பத்மநாதன் தமதுரையில்-

இந்நூலாசிரியர் தனது அறிவு, தான் பெற்ற அனுபவங்களுக்கேற்ப புதிய சிந்தனைகளை உள்வாங்கி குழந்தைகளின் நிலையில் நின்று இந்நூலை ஆக்கியுள்ளார். அவதானித் தல், உற்றுநோக்குதல், செய்து பார்த் தல் போன்ற கற்றல், கற்பித்தல் உத் திகளைத் தாங்கி நிற்கும் இந்நூலில் கற்பிக்க வேண்டும் என்ற இலக்கே மிஞ்சி இருக்கிறது. ஆதலால் ஆசிரி யர்களைப் பயிற்றுவிப்பவர்கள், ஆசிரிய பயிலுநர்கள், அறநெறி போதிப்பவர் கள் ஆகியோருக்கு சிறந்த பிரயோகங் களையும், விடயங்களையும், உத்தி களையும் வழிகாட்டி நிற்கிறது. மாண வன் தன்னைத்தானே இனங்காணக் கூடிய ஆற்றுகையும் இடம் பெற்றுள் ளமை சிறப்பம்சமாகும் - என்றார். (க-7)

# பெண்கள் 6 பேர் இம்முறை நாடாளுமன்றுக்குத் தெரிவு

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தல் முடிவுகளின்படி இம்முறை 6 பெண்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி சார்பில் முன்னாள் அமைச்சர் பேரி யல் அஷ்ரப் திகாமடுல்ல மாவட் டத்தில் இருந்தும், முன்னாள் அமைச் சர் சுமேதா பீ.ஜயசேன மொனராகல மாவட்டத்திலிருந்தும், சோமா குமாரி தென்னக்கோன் குருநாகல் மாவட் டத்திலிருந்தும், மல்லிகா டி மெல் லக்ஷ்மி மாத்தளை மாவட்டத்திலி ருந்தும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

ஐ.தே.கட்சி சார்பில் அனுராதபுர மாவட்டத்திலிருந்து சந்திரானி பண்டா ரவும், குருநாகல் மாவட்டத்திலிருந்து அமரா பியசீலி ரத்நாயக்கவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மாத்தளை மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட மல்லிகா டிமெல் லக்ஷ்மி , முன்னாள் அமைச் சர் ரொனி டிமெல்லின் மனைவியா ராவார். ரொனி டி மெல்லும் நாடாளு மன்றத்துக்குத் தெரிவாகியிருப்பது குறிப்பிடத்தக்கது. (க-7)

# வாசஸ்தலத்தைக் கையளிக்க அவகாசம் கோருகிறார் மங்கள!

கொழும்பு,டிசெ.10

முன்னாள் அமைச்சரான மங்கள சமரவீர தனது உத்தியோகபூர்வ வாசஸ்தலம் மற்றும் வாகனங்களை மீளளிப்பதற்கு எதிர்வரும் ஜனவரி மாதம் வரை காலஅவகாசம் வழங்கு மாறு பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாள ரைக் கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

இது குறித்து அமைச்சர் எழு திய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:-

அமைச்சராகப் பதவி வகித்த காலத்தில் எனக்கு வழங்கப்பட்ட வாசஸ்தலத்தை கூடிய விரைவில் மீள ஒப்படைப்பதற்குரிய நடவடிக் கைகளை எடுத்துவருகின்றேன்.

எனக்கென சொந்த வீடு எதுவும் இல்லை. தற்போது வீடு ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றேன். எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் வாரமளவி லேயே தனியான வீடு ஒன்றைப் பெற் றுக்கொள்ள முடியும் என நினைக்கின் றேன்.

உத்தியோகபூர்வக் கடமைகளுக் காக எனக்கு வழங்கப்பட்ட வாகனங் கள் குறித்த விவரங்களையும் பொது நிர்வாக அமைச்சு அறிவிக்கவேண் டும். இதன் மூலமே வாகனங்களைக் கையளிக்கக்கூடியதாகவிருக்கும்.

- என்று அதில் தெரிவிக்கப்பட்டுள் ளது. (க-7)

## விரிவுரையாளர் கவனத்துக்கு!

பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர்கள் அனைவரையும் இன்று காலை 10.30 மணிக்கு கலா சாலைக்குச் சமுகளிக்குமாறு கேட் கப்பட்டுள்ளது.

இதேவேளை -

கடந்த டிசெம்பர் மாதம் நடத்தப் பட்ட இறுதிப் பரீட்சைகளின் பெறு பேறுகளை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் இன்று காலை 10 மணிக்கு நேரில் சமுகமளித்துப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

## உதயவாக்கு

வெற்றி என்பது விழாமல் இருப்பதல்ல... விழுகின்ற ஒவ் வொருமுறையும் கம்பீரமாக மீண் டும் எழுந்து நிற்பதே.

## சந்திரசேகரனுக்கு ஒரு லட்சத்து 21ஆயிரம் விருப்பு வாக்குகள்!

கொழும்பு,டிசெ.10

கடந்த பொதுத் தேர்தலில் ஐக் கிய தேசியக் கட்சியின் சார்பில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டி யிட்ட மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் ஒரு லட்சத்து 21ஆயிரத்து 421 விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தில் இலங் கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஆறுமுகம் தொண்டமானுக்கு அடுத்ததாக அதி கூடிய விருப்பு வாக்குகளை இவர் பெற்றுள்ளார். 121 விருப்பு வாக்கு கள் வித்தியாசத்தில் ஆறுமுகம் தொண்டமான் முதலாவது இடத்தைப் பெற்றிருக்கிறார். முத்து சிவலிங்கம் 17,338 வாக்குகளைப் பெற்றுள்ளார்.

இதேவேளை -

பொது மக்கள் ஐக்கிய முன்ன ணிக்கு கட்சி தாவிய தமிழ் வேட் பாளர்களான புத்திரசிகாமணி மற்றும் இராஜரட்ணம், கனகராஜ் ஆகியோர் இத்தேர்தலில் போட்டியிட்டு தோல்வி யடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-6)

# மாணவர்களுக்கு 2ஆம் கட்ட மண்ணெண்ணெய்

தென்மராட்சி,டிசெ.10

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக் குத் தோற்றும் மாணவர்களுக்கான இரண்டாம் கட்ட மண்ணெண்ணெய் விநியோகம் நேற்றுத் தொடக்கம் கட்டை வேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கக் கிளைக் கடைகளில் வழங்கப்பட்டு வருகின்றது.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர் கள் தமது பரீட்சை அடையாள அட்டையை காண்பித்து ஒரு லீற் றர் மண்ணெண்ணெய் பெற்றுக்கொள ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

சங்க எல்லைப் பரப்பிற்குட்பட்ட மாணவர்களுக்கும் இப்பகுதியில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மாண வர்களுக்கும் மண்ணெண்ணெய் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப் பட்டது.

இதேவேளை இப்பகுதியைச் சேர்ந்த குடியிருப்பாளர்களுக்கும் இடம்பெயர்ந்து இப்பகுதியில் தங்கி யுள்ள குடும்பங்களுக்கும் பங்கீட்டு அட்டைக்கு தலா ஒரு லீற்றர் வீதம் மண்ணெண்ணெய் வழங்கப்படுவதா கவும் சங்கத் தலைவர் த.சிதம்பரப் பிள்ளை தெரிவித்தார். (க-117)

# குடத்தனை வாசி படுகாயம்

வேட்டைக்காரர்களால் துரத்தி வரப்பட்ட பன்றி தோட்ட வேலை செய்து கொண்டிருந்தவரைத் தாக்கிக காயப்படுத்திய சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை அம்பன் மணல் பகுதியில் இடம்பெற்றது.

குடத்தனை அம்பனைச் சேர்ந்த சபாபதி துரைராசசிங்கம் (வயது 45) என்பவர் தொடையில் படுகாயமடைநத நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(க-117)

# யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல: காணி/178

1. திருநாவுக்கரசு கைம்பெண் கலைமகள்,
2. டாக்டர் திருநாவுக்கரசு திருக்குமரன்,
3. திருநாவுக்கரசு திருமாறன்,
4. திருநாவுக்கரசு திருகரன் அனைவரும்

காங்கேசன்துறை, தற்போது
48, ரூர் வீதி, கொழும்பு 06.
இவர்கள் தமது அற்றோனித்
தத்துவக்காரன் மூலம்
கந்தையா பரம்சோதி, அளவெட்டி.

*- வழக்காளிகள்*

எதிர்

சாந்தி பிலிம்ஸ் லிமிட்டெட்,
11, இராமையாச்செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

*- எதிராளி*

## தீர்வை

இந்த வழக்கு 01.10.2001இல் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி திருவாளர் இ.த. விக்னராஜா அவர்கள் முன்பாக ஒருமுக விளக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது வழக்காளிகளின் சார்பில் வழக்காளிகளின் அற்றோனித் தத்துவக்காரனாகிய கந்தையா பரம்சோதி என்பவர் மன்றிலே பிரசன்னமாக இருந்தார். வழக்காளிகளின் பதிவு பெற்ற சட்டத்தரணியான திரு. முருகேசு சபாநாதன் என்பவரும் வழக்காளிகளின் சார்பில் அன்றைய தினம் மன்றில் பிரசன்னமாக இருந்தார். எதிராளிகளுக்கு முதல் நிலையில் அழைப்புக் கட்டளை பதிவுத் தபாலில் அனுப்பப்பட்டும் அதன் பின்னர் "உதயன்" புதினப் பத்திரிகையில் அழைப்புக்கட்டளை பிரசுரித்திருந்தும் குறித்த எதிராளிகள் நேரடியாகவோ அல்லது ஒரு சட்டத்தரணி மூலமாகவோ மன்றில் தோன்றி நடவடிக்கைகள் எதனையும் எடுக்காத காரணத்தினால் இவ்வழக்கு எதிர்ப்பில்லா விளக்கமாக விளங்குவதற்கு நாள் குறிக்கப்பட்டு இன்றைய தினம் குறித்த அற்றோனித் தத்துவக்காரனின் சாட்சியையும் பதந்து வழக்காளிகளால் அணைக்கப்பட்ட ஆவணங்களையும், பரிசீலனை செய்து, மன்று மேலெழுந்த வாரியாக திருப்தியடைந்ததன் பிரகாரம் பின்வருமாறு கட்டளையிட்டு தீர்ப்பு வழங்குகிறது.

குறித்த துரட்சியில் விவரிக்கப்பட்டுள்ள ஆதனம் வழக்காளிகளுக்கேயுரியதென்றும், இவ்வாதனத்திலிருந்து குறித்த எதிராளிக் கம்பனி அவர்களது தங்குநர், வேலையாள்கள், முகவர்கள் போன்ற யாபேரும் வெளியேறி இவ்வாதனத்தின் சமாதான ஆட்சியை வழக்காளிகளுக்கு ஒப்படைக்க வேண்டுமென்றும் மேலும், குறித்த எதிராளிக் கம்பனி விசேட நட்டமாக வழக்காளிகளுக்கு ரூபா ஐம்பதாயிரமும் (ரூ.50,000/-) இவ்வழகக்கு அணைத்த திகதியிலிருந்து இவ்வாதனத்தின் சமாதான ஆட்சி வழக்காளிகளுக்கு ஒப்படைக்கும் வரை தொடர் நட்டமாக மாதாந்தம் ரூ.5,000/- வீதம் வழக்காளிகளுக்கு செலுத்த வேண்டும் என்றும் மற்றும் இவ் வழக்கின் செலவாக வழக்காளிகள் செலவு பட்டியலை அணைத்து மன்றின் பதிவாளர் வரியீடு செய்யும் செலவையும் எதிராளிக் கம்பனி வழக்காளிகளுக்குச் செலுத்தவேண்டும் என்றும் இத்தால் தீர்ப்பு வழங்கி கட்டளையிடப்படுகிறது.

2001ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி என்னால் வரையப்பட்டது.

இ.த.விக்னராஜா
மாவட்ட நீதிபதி,
யாழ்ப்பாணம்.

மு.சபாநாதன்,
வழக்காளிகளின்
பதிவுபெற்ற சட்டத்தரணி.

*மேற்குறித்த எதிராளிக் கம்பனிக்கு,*

இந்த வழக்கிலே நீதிமன்றம் எதிராளியாகிய உங்களுக்கு எதிராக மேற்கூறியுள்ள பிரகாரம் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்ப்பின் பிரதி உங்களுக்கு குடியியல் நடவடிக்கைக் கோவையின் 85 (4) ஆம் பிரிவின் கீழ் அனுப்பி வைக்கப்படுகிறது. இதன் பிரதி கிடைத்து 14 நாள்களுக்குள் நீங்கள் விரும்பினால் மன்றில் தோன்றி உரிய நடவடிக்கைகள் எடுக்கலாம்.

து.சிறிமோகன்
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

(95723)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
## வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
15
-
10
-
1936



மறைவு
10
-
11
-
2001

## திருமதி நடராஜா கமலாம்பிகை
**(சின்னமணி)**

10.11.2001இல் இறையடியெய்திய ஈச்சமோட்டையைச் சேர்ந்த திருமதி நடராஜா (சின்னமணி) கமலாம்பிகை அவர்களது வீட்டுக்கிருத்திய நிகழ்வு *இன்று (10.12.2001) திங்கட்கிழமை* நடைபெறும். அத்துடன் தொடர்ந்து நிகழும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் ஆகியவற்றிலும் பங்குகொள்ளும்வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:

*167/1 கோயில் வீதி,*
*நல்லூர் வடக்கு,*
*யாழ்ப்பாணம்.*
*TEL/FAX: 2784*

திரு. சரவணமுத்து சண்முகராஜா
*(காப்புறுதி அமைப்பாளர்)*
திருமதி ச.ர்ாஜசிலோஜனா *(டெலா)*
*(மகள்)*

(95725)

## மாணவன் வயிற்றில் ஆழமாக ஏறிய வேல்

தென்மராட்சி,டிசெ.10

மழையின்போது நிரம்பியிருந்த ஆலயக் கேணியில் குளித்துவிட்டு வெளியேறிய வேளையில் படி வழுக்கி கேணிக்குள் வீழ்ந்த போது அங்கு நடப்பட்டிருந்த வேல் வயிற்றில் குத்தி படுகாயமடைந்த பாடசாலை மாணவன் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை புற்றளை பிள்ளையார் ஆலயக் கேணியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் புலோலி புற்றளையைச் சேர்ந்த யோகலிங்கம் அருள்முகுந்தன் (வயது 16) என்பவரே காயமடைந்தார்.

இவரது வயிற்றில் ஆழமாக ஏறிய வேல் இரைப்பை வரை காயம் ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-117)

## கலந்துரையாடல்

வலி.வடக்கு,டிசெ.10

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான கலந்துரையாடல் நல்லூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலாளர் நா.வேதநாயகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

2002ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டி, பயிற்சிமுகாம், அபிவிருத்தி செயற்றிட்டம் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளதால் கழகப் பிரதிநிதிகளை இதில் கலந்துகொள்ளும்படி நல்லூர் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் செ.மகிந்தன் கேட்டுள்ளார். (க-86)

## தொலைக்கல்வி ஆசிரியருக்கு நாளை முதல் வகுப்பு

கோண்டாவில்,டிசெ.10

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இடம்பெற்றுவரும் தொலைக் கல்வி ஆசிரியர்களுக்கான தொடர்புறு வகுப்புகள் நாளை செவ்வாய்க்கிழமை முதல் தொடர்ந்து ஐந்து தினங்கள் நடைபெறவுள்ளன.

தொலைக்கல்வி மூலம் கல்வி பயிலும் ஆசிரியர்களைக் கலந்துகொள்ளும் படி சிரேஷ்ட விரிவுரையாளர் தெரிவித்துள்ளார். (க-86)


## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்மா,
வாதநோய்கள், வலிப்புநோய்,
பீனிசம், தலையிடி,
தலை, கால் அவியல்,
சரும நோய்கள்,
மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு,
வெள்ளைக் கசிவு, கருவழிதல்,
மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக் குறைவு, மூல வியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபலமானவர்.
சகல வியாதிகளையும்
குணப்படுத்துபவர்.

வேலணை
வைத்திய கலாநிதி
**ச.இராசரத்தினம்**
*121, 2ஆம் குறுக்குத் தெரு,*
*யாழ்ப்பாணம்.*
*தொலைபேசி எண்: 2459*

(கு)



# மலிவு விலை

மேலும் பல புதிய CDகள் (SOFTWARE CD'S)
சகல பிறின்டர்களுக்கான
- CARTRIDGES & TONER
- PLAN CD'S (650-700MB)
- INKJET PAPER
- LAMINATING PAPER
- PHOTO QUALITY PAPER
- SHARP போட்டோ இயந்திரத்தின் உதிரிப்பாகங்கள்.
- S 126, S 116 TONER வகைகள் இன்னும் பல

**SRI MURUGAN COMPUTER SYSTEMS**
*303, K.K.S. ROAD, JAFFNA.*
*T.P. 021-2670 FAX: 021-3214*

(c/19683)


# ஓராண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
07
-
11
-
1934



இறைவன் அடியில்
10
-
12
-
2000

## அமரர் எலிசபெத் சூசைதாசன்

*பாசத்தை ஊட்டி பணிவுடன் எமை வளர்த்து*
*பார் புகழ பண்புடன் வாழ்ந்து இறையடி சேர்ந்த தெய்வமே!*
*சிறப்பிழந்தோம் நீங்கள் சென்ற நாளிலிருந்து*
*சிறகிழந்த பறவைகளாய் வேதனையில் துடிக்கின்றோம்*
*கலங்கரை விளக்காய் வாழ்ந்து நீங்கள் மறைந்தாலும்*
*காலமெல்லாம் வாழ்வோம் உங்கள் நினைவுடனே!*
*ஓராண்டு என்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும்*
*ஒப்புயர்வற்ற உங்கள் நினைவுகள் எம்முடனே வாழும்.*

உங்கள் ஆத்மா சாந்தியடைய பரமதேவனிடம் வேண்டுகின்றோம்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார்,உறவினர்.

*இல.5,கச்சேரி கிழக்கு ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.*

(95675)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் இராமு வினாசித்தம்பி

*(யூனியன் தொழிலாளி, யாழ். டவுன்ஸ்)*
*(பொன்னாலையைப் பிறப்பிடமாகவும்,*
*யாழ். கற்குளலேன், கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்டவர்)*

மலராக: 04-03-1923
திதி:10-12-2001
சருகாக: 22-11-2000

அன்பின் திருவுருவாய் தர்மத்தின் உறைவிடமாய் இருந்த பாசமுள்ள எங்கள் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தி அடைய நாம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

*தகவல்:*
க.யோகராசா *(பேறாமகன்)*
*சேச் லேன், கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*

- மனைவி, மக்கள்,
மருமக்க்ள்,
பேரப்பிள்ளைகள்.

(95680)


உ
குகமயம்

# புதுக்கடை திறப்புவிழா அழைப்பு

**அன்புடையீர்!**

நிகழும் மங்களகரமான விஷு வருடம் கார்த்திகைத் திங்கள் 25ஆம் நாள் இன்று (10.12.2001) திங்கட்கிழமை முற்பகல் 10.45 மணிமுதல் 12.30 மணிவரையுள்ள கும்பலக்கின சுபமுகூர்த்தத்தில்

*எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற*

## ஸ்ரீ முருகன் மெடிக்கல் ஸ்ரோர்ஸ்
## SRI MURUKAN MEDICAL STORES

என்னும் ஸ்தாபனத்தை இறைவன் திருவருள் துணைகொண்டு திறந்து ஆரம்பிக்கவுள்ளதால் அத்தருணம் அன்பர்கள், நண்பர்கள், உறவினர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் வருகை தந்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.34, ஆடியபாத வீதி,
(நவீன சந்தை வெளிப்புறம்),
திருநெல்வேலி.

தங்கள் நல்வரவை நாடும்
ஸ்ரீமுருகன் மெடிக்கல் ஸ்ரோர்ஸ்,
கல்வியங்காடு ஸ்தாபனத்தார்.

எம்மிடம் மருந்துச் சரக்குப் பொருள்களும் அபிஷேகப்பொருள்களும் வாசனைத் திரவியங்களும் பெற்றுக் கொள்ளலாம்.

(95734)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 01 - 07 - 1920



உதிர்வு 10 - 11 - 2001

## திருமதி காமாட்சி தம்பிராசா

(புங்குடுதீவு)

அன்போடும் பாசத்தோடும் எம்மை வளர்த்து
நல்வழி காட்டிய எமது அன்னையே!
மாதம் ஒன்று கடந்தபோதும் உங்கள் நினைவுகள்
எம்மைவிட்டு என்றும் அகலாது, ஆறாது எம் நெஞ்சம்
விழிகள் தேடும் இடமெல்லாம்
உங்கள் உருவந்தான் தெரிகிறது!
உங்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால்வாடும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*இல.7, பிரப்பங்குள வீதி,*
*யாழ்ப்பாணம்.* (95756)

# 6ஆம் மாத நினைவஞ்சலி

பிறப்பு 25 - 10 - 1985



இறப்பு 10 - 06 - 2001

## செல்வன் கபில் சிறிநிதி

அன்பே உருவான எம் செல்வமே!
பெற்றவர்கள் மனம் இங்கு பரிதவிக்க
உடன் பிறந்தோர் இங்கு துடிதுடிக்க
உற்றவர்கள் அனைவரும் ஏங்கி நிற்க
காலனுக்கு என்ன அவசரமோ?
சந்நிதி கடலில் உனை பறித்ததென்ன
மாதங்கள் ஆறு கடந்தாலும்
மறையுமா உன் அன்பு முகம்!

*ஊரெழு கிழக்கு.*
T.P: 070212976 (95765)

உன் பிரிவால் துயருறும்:
பெரியப்பா குடும்பம்

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின்
தொண்டர் ஆசிரியராகக் கடமையாற்றும்
செல்வி ஜெனசில்டா அவர்களின்
அன்புத் தந்தையார்

## கிறகோலி நீக்கிலாஸ்

அவர்கள் காலமானதையிட்டு துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி, அமரரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.* (95755)

சென்.ஜேம்ஸ் மகளிர்
பாடசாலைக் குடும்பம்.

# கண்ணீர் அஞ்சலி

அளவெட்டி, மல்லாகம் ப.நோ.கூ.சங்கம்

எமது சங்கப் பொது முகாமையாளர்
திரு.க.ஜெயசீலன் அவர்களின்
அன்புத் தந்தையார்

## தம்பர் கனகரத்தினம்

அவர்கள் காலமானதையிட்டு நாம் பெரிதும் கவலை அடைகின்றோம். அவரது [illegible]றைவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனு[illegible]களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அமரருக்கு எமது கண்ணீர் அஞ்[illegible]யக் காணிக்கையாக்கி அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்.
அளவெட்டி, மல்லாகம் ப.நோ.கூ.சங்கம்.
(95757)

## ஒப்பந்தம் காலாவதியானது

கொழும்பு,டிசெ.10

பொ.ஐ.முன்னணி அரசாங்கத்துக்கும் பிறீமா நிறுவனத்துக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டிருந்த ஒப்பந்தம் காலாவதியாவதைத் தொடர்ந்து கோதுமை மாவின் விலை பெருமளவு அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி ஒரு கிலோ பிறீமா மாவின் விலை ரூ.15.50இலிருந்து ரூ.22.67 ஆகவும் ஒரு கிலோ கோதுமை மாவின் விலை ரூ.15இலிருந்து ரூ.20.48 சதமாகவும் அதிகரிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மாவின் விலை அதிகரிக்கும் சாத்தியக்கூறுகள் இருப்பதனால் புதிதாகப் பொறுப்பேற்கும் ஐ.தே.கட்சி அரசுககு மாவின் விலையைக் குறைப்பதே முதல் பணியாக இருக்கும் என்று ஐதேகட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-6)

## விமானப்படை சிப்பாய் பலி!

மட்டக்களப்பு திருப்பெருந்துறையில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் விமானப்படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு அந்தப் பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த விமானப்படை அணி மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

புலிகள் தரப்பில் சேதம் எதுவும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ம)

## கலந்துரையாடல்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினால் நடத்தப்படவுள்ள உதைபந்தாட்டப் போட்டி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

போட்டிக்கு விண்ணப்பித்த அணிகளின் பொறுப்பாளர்கள் அனைவரையும் இச்சந்திப்பில் கலந்துகொள்ளுமாறு சங்கத்தின் யாழ். மாவட்டச் செயலாளர் க.குமாரசாமி கேட்டுள்ளார். (ம)


G.C.E. (A/L)
படிவங்கள்
* மீள் ஆய்வுப் படிவம்
* 2002 பரீட்சைக்கான விண்ணப்பப் படிவம்
12-12-2001 முதல்
விற்பனைக்கு வரும்.
பாரதி பதிப்பகம்,
430, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(C/19690)

ஓராண்டு
சித்திரம் பயிற்சி 2002
பயிற்சி முடிவில் சான்றிதழ்.
விவரங்களுக்கு:
IAT
76, ஆத்திசூடி,
கந்தர்மடம்.
(95752)

ராஜா யாழ்ப்பாணம்
நான்காவது வாரமாக
கமல், மனீஷா
மற்றும் பலர் நடித்த
ஆளவந்தான்
தினசரி:- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2, 5 (புதிய நேரம்)
(C/19571)

நாகம்ஸ் சுன்னாகம்
பிரசாந்த், ஷாலினி, மணிவண்ணன்
நடித்த
பிரியாத வரம் வேண்டும்
(ரீல்ஸ்)
காட்சிகள் 11.00, 3.00 (புதிய நேரம்)
(95721)

நிறஞ்சனாஸ்
சங்கானை
ரஜனி, பிரபு, கௌதமி
நடித்த
குருசிஷ்யன்
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (பு.நே.)


# கண்ணீர் அஞ்சலி

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் செயலாளர்
திரு.கு.ந.பாலச்சந்திரன் அவர்களின் அன்பு மாமனார்

அமரர்

## தினகரிப்பிள்ளை குமாரசாமி

(இளைப்பாறிய தபால் உத்தியோகத்தர்)

அவர்கள் 08.12.2001 இல் காலமானதையிட்டு அமரருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பிப்பதோடு அவரது இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் அமரரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*சாவகச்சேரி பிரதேசசபை,*
*இருபாலை,*
*கோண்டாவில் வீதி,*
*கோண்டாவில்.* (95758)

தலைவர், செயலாளர்,
உறுப்பினர்,உத்தியோகத்தர்கள்,
பணியாளர்கள்,
ஊழியர்நலன்புரிச்சங்கம்.

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி யோகேஸ்வரன்

இல.19, செம்மணி நல்லூரை வசிப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி யோகேஸ்வரன் (இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் - யாழ்ப்பாணம்) நேற்றுமுன்தினம் (08.12.2001) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நாகபூஷணியின் அன்புக் கணவரும், துஷ்யந்தன் (யா/மத்திய கல்லூரி), ஜான்சி (யா/திருக்குடும்ப கன்னியர்மடம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நல்லம்மா (இத்தாலி), பூமணி (வவுனியா), தங்கராணி (வட்டக்கச்சி), சரஸ்வதி (மல்லாவி), வசந்தகுமாரி (வவுனியா) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற செல்வரத்தினம் (இளைப்பாறிய தபால் ஊழியர் - ஊர்காவற்றுறை) மற்றும் அந்தோனிப்பிள்ளை (இளைப்பாறிய மின்சார சபை ஊழியர் - வவுனியா), ஆசீர்வாதம் (இளைப்பாறிய நில அளவையாளர் - வட்டக்கச்சி), இராசையா, நடராசா (தொலைத் தொடர்பு நிலையம் - வவுனியா) ஆகியோரின் மைத்துனரும், வேலுப்பிள்ளை கந்தையா (இளைப்பாறிய தபால் ஊழியர் - யாழ்.), காலஞ்சென்ற அப்புக்குட்டி பெனடிக்ற் (இளைப்பாறிய தொலைத் தொடர்பு நிலையம் ஊழியர், யாழ்ப்பாணம்) ஆகியோரின் மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2001) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் (பு.நே.) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நாகபூஷணி
(மனைவி)

*19,செம்மணி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (95750)

## திருமதி வைரவநாதன் நாகம்மா

கல்வயலைச் சேர்ந்த திருமதி வைரவநாதன் நாகம்மா அவர்கள் நேற்று (09.12.2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி வைரவநாதனின் அன்பு மனைவியும், அருள்நேசன், கமலேஸ்வரன், வசந்தா (கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆசிரிய மாணவி) ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகேஸ்வரி காந்திமதி, தயேந்திரராசா ஆகியோரின் அன்பு மாமியாரும், நிதூஷாவின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (09.12.2001) ஞாயிற்றுக்கிழமை சோனப்பு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சொந்த முகவரி:
*கல்வயல்*
தற்காலிக முகவரி:
*மத்தொனி,*
*பொதுச்சந்தை,*
*கரவெட்டி மேற்கு.*

தகவல்:
அருள்நேசன்
(மகன்)

(C/19589)

## திருமதி சபாபதி இலச்சுமி

அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த திருமதி சபாபதி இலச்சுமி அவர்கள் நேற்று (2001.12.09) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதி அவர்களின் அன்பு மனைவியும் இராசரத்தினம் (பூசகர், சித்திரவேலாயுதர் ஆலயம் - அச்சுவேலி வடக்கு) வரதராசா (பிரான்ஸ்) செல்வராசு விக்னேஸ்வரி, சரஸ்வதி, புஷ்பராணி ஆகியோரின் பாசமிகு தாயாரும், இரத்தினம், தம்பிராசா, மகாலிங்கம், சிவ ராசா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அச்சுவேலி வடக்கிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (2001.12.10) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் வல்லை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:-
திருமதி பொன்னுத்துரை பிரேமா
(பேர்த்தி)

*அச்சுவேலி வடக்கு,*
*அச்சுவேலி.* (95759)

## தம்பியையா இராஜசூரியர்

(இராஜேஸ்வரன்)

(முன்னாள் சங்கிடுத்தாம் O.L.R. யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தம்பியையா இராஜசூரியர் 08-12-2001 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பியையா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பூராஜா, பூராணி, இந்திராணி மற்றும் வயலற், இராஜரெட்ணம், பெலிசிட்ரஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10-12-2001) திங்கட்கிழமை பி.ப. 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து யாழ்.அடைக்கலநாயகி (O.L.R) ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு திருப்பலியின் பின் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அருட்தந்தை
J.P.E. செல்வராஜா
(குரு முதல்வர்)

*7, மாட்டீன் ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.* (95761)

# நாட்டைக் காக்க முழு அதிகாரத்தையும் பயன்படுத்துவேன் என்கிறார் ஜனாதிபதி!

நாட்டு மக்கள் அனைவரையும் பாதுகாப்பதற்கென ஜனாதிபதி என்ற ரீதியிலும், பாதுகாப்பு அமைச்சர் என்ற நிலையிலும், ஆயுதப் படைகளின் தளபதி என்ற வகையிலும் இன்றைய தினத்திலிருந்து பூரண அதிகாரங்களையும் உபயோகிக்க உள்ளேன்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நேற்றுப் பிற்பகல் ரூபவாஹினி மூலம் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

தேர்தலின் பின்னர் இடம்பெற்று வரும் வன்செயல்களுக்குப் பொறுப்பானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். உரிய நடவடிக்கை எடுக்கும்படி இராணுவத்தினருக்கும் பொலீஸாருக்கும் ஏற்கனவே பணிப்புரைகள் விடுக்கப்பட்டுள்ளன - என்றும் அவர் தெரிவித்தார்.

1994ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட புதிய அரசியல் கலாசாரத்தை முன்னெடுத்துச் செல்லுமாறும் - வன்செயல்களைக் கைவிடும்படி கட்சி ஆதரவாளர்களை வற்புறுத்துமாறும் - அரசியல் கட்சித் தலைவர்களை அவர் கேட்டுக்கொண்டார்.

தேர்தலின் பின்னர் இடம்பெற்ற வன்செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களில் 95 சதவீதமானோர் பொ.ஐ.மு. ஆதரவாளர்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-9)

## காணாமற்போனோரின் உறவினர்களது இன்றைய அமைதிப் பேரணிக்கு ஈ.பி.டி.பி. ஆதரவு தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.10

குடாநாட்டில் கைது செய்யப்பட்ட பின் காணாமற்போன பல நூற்றுக்கணக்கானோரின் பெற்றோர் மற்றும் பாதுகாவலர் சங்கம் இன்று யாழ். நகரில் நடத்தவிருக்கும் அமைதிப் பேரணிக்கு ஆதரவு தெரிவித்து ஈ.பி.டி.பியின் யாழ். அலுவலகம் நேற்று அறிக்கை ஒன்றை விடுத்தது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

காணாமற்போனோர் தொடர்பான பிரச்சினை கடந்த பல ஆண்டுகளாக நீடித்து வரும் ஒரு பிரச்சினையாகும். காணாமற்போனவர்களின் உறவினர்களின் சோகங்களையும், அவர்களது துயரங்களையும், பாரங்களையும் நன்கறிந்தவர்கள் என்ற வகையில் -காணாமற்போனோர் சங்கத்தினை அமைத்தவர்கள் என்ற வகையில் - இப்பிரச்சினைக்குத் தீர்க்கமான, தெளிவான முடிவினைக்காண வேண்டும் என்பதில் மிகுந்த நாட்டம் கொண்டுள்ளோம்.

தற்போது மாறியுள்ள புதிய அரசியல் சூழ்நிலையில பதவிக்கு வந்துள்ள புதிய அரசு, இப்பிரச்சினைக்கான தீர்வைக் கண்டறிய நாங்கள் எம்மாலான சகல ஒத்துழைப்புக்களையும் வழங்கத் தயாராக உள்ளதுடன் யாழ். மாவட்டத்தின் பெரும்பாலான ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளவர்கள் இப்பிரச்சினையில் உடனடியாகத் தீவிர கவனம் செலுத்த முன்வர வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-ஒ)

## புளொட் அமைப்பும் ஆதரவு

காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் இன்று யாழ்நகரில் நடத்த இருக்கும் பேரணிக்கு புளொட் அமைப்பும் ஆதரவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கைது செய்யப்பட்டு காணாமற்போனோரின் பிரச்சினைக்கு இன்று வரை எந்தவிதப்பதிலும் சம்பந்தப்பட்டோர் தரப்பிலிருந்து கிடைக்கவில்லை. விசாரணைக்கு அழைத்தல், நஷ்டஈடு வழங்குதல், மரணச் சான்றிதழ் கொடுத்தல் என்று நடைமுறைக்கு ஒவ்வாத விடயங்கள் குறித்தே தெரிவிக்கப்பட்டு வந்தது.

புலிகளுடன் தொடர்பு, புலிகளைப் பற்றி தகவல் தரத் தவறியமை, அவர்களுக்கு ஆதரவு வழங்கியமை போன்ற காரணங்களைக் காட்டி கைதுகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

புலிகளுடன் தொடர்பு உள்ளதாகவும் - அவர்களை ஆதரிப்பதாகவும்- தொடர்புசாதனங்கள் மூலம் பகிரங்கமாகப் பிரசாரம் மேற்கொண்டோர் நாடாளுமன்றம் செல்ல, எதுவித குற்றமுமற்ற அப்பாவிகள் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்குள்ளாவதும், சிறைக்கூடம் செல்வதும், காணாமற்போவதும் எந்தவகையில் நியாயமானது.

காணாமற்போனோர் பற்றிய முடிவுகளை உறுதியாகவும், இறுதியாகவும் விரைவில் வெளியிட வேண்டும். பயங்கரவாதத் தடைச் சட்டம் என்ற பெயரில் அப்பாவி இளைஞர்கள், யுவதிகள் கைது செய்யப்படுவது உடன் நிறுத்தப்பட வேண்டும். இவற்றிற்கெதிராக மேற்கொள்ளப்படும் அனைத்து எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கும் எமது பூரண ஒத்துழைப்பையும், பங்களிப்பையும் என்றும் வழங்குவோம் - என்றுள்ளது. (ம)

## வாழ்க்கைச் செலவைக் குறைக்க புதிய அரசு வழி காணவேண்டும்

### ஜே.வி.பி. நிர்வாகக் குழு தீர்மானம்

கொழும்பு,டிசெ.10

பொதுமக்களுக்கு நன்மையளிக்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்த புதிய அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஜே.வி.பி. தனது ஆதரவை வழங்கும்.

வாழ்க்கைச் செலவு குறைக்கப்பட வேண்டும். சுதந்திர ஆணைக்குழுக்கள் தொடர்பாகத் துணிந்து நடவடிக்கை எடுக்க அரசாங்கத்தை வலியுறுத்துவோம் என்று ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச கூறினார்.

நேற்றுக்காலை கட்சியின் நிர்வாகக்குழு தேர்தலின் பின் முதன்முறையாகக் கூடியது. அங்கு கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரிகிறது.

செயற்குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளை விமல் வீரவன்ச செய்தியாளர் மாநாட்டில் அறிவித்தார். ஜே.வி.பி. தொடர்ந்தும் தனியொரு எதிர்க்கட்சியாக நாடாளுமன்றத்தில் செயற்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## சகல கட்சி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்றதும் கங்காராம விகாரைக்குச் சென்று மத வைபவங்களில் கலந்துகொண்டார். தனது புதிய அரசியல் கலாசாரம் பற்றி அவர் அங்கு அறிவித்தார்.

தன்னுடைய அரசில் எல்லாக் கட்சிகளுக்கும் இடம் அளிக்கப்போவதாக அவர் கூறினார். கட்சிகளுக்கு விரைவில் அழைப்பு விடப்படும் என்றார். இதன்காரணமாக அமைச்சர்கள் நியமனத்துக்கு இன்னும் சில நாள்கள் செல்லும் என்று தெரிவித்தார்.

அங்கு ஆற்றிய உரையில் அவர புதிய அமைச்சரவை நியமனம் குறித்தும் குறிப்பிட்டார். "புதிய அமைச்சர்களை நியமிப்பதற்குமுன் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கிறேன். புதிய அரசியல் கலாசாரத்தை கடைப்பிடிக்கவிருக்கிறேன். ஐக்கியமாக எப்படிச் செயற்படுவது என்பதை ஆராய்ந்து அமைச்சர்களை நியமிப்பேன். பழையதை மறப்போம். எதிர்காலம் பற்றிச் சிந்திப்போம்."

- இவ்வாறு ரணில் தனது உரையில் குறிப்பிட்டார்.

இந்த வைபவத்தில் உரையாற்றிய கங்காராமயாவின் தலைவரும் சிரேஷ்ட பௌத்த குருவுமான கொலபொட ஞானசார தேரர் -

ஜனாதிபதி தனது அதிகாரங்களை பிரதமரிடம் கையளிக்க வேண்டும். அவ்வாறு செய்ய அவர் தவறினால் ஆயிரக்கணக்கான பௌத்த தேரர்கள் மக்களுடன் சேர்ந்து வீதிகளில் இறங்க நேரிடும். இந்த நாட்டை தீப்பிழம்பாக மாற்றிவிட வேண்டாம் என்று அவரிடம் கேட்டுக் கொள்கின்றோம் - என்று எச்சரித்தார்.(ஐ-9)

## தனது 29 ஆவது வயதில் அமைச்சரானவர் ரணில்

கொழும்பு,டிசெ.10

1977 ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றிபெற்று ரணில் முதல் தடவையாக நாடாளுமன்றம் பிரவேசித்தார். 1978 ஆம் ஆண்டு ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் அமைச்சரவையில் ஓர் அமைச்சராக்கப்பட்டார். அப்பொழுது அவருக்கு வயது 29. இதன்மூலம் வயதில் மிகவும் இளைய அமைச்சர் என்ற பெருமையை அவர் பெற்றார்.

1993ஆம் ஆண்டு அன்றைய ஜனாதிபதி பிரேமதாஸா குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டதும், பிரதமர் டி.பி.விஜேதுங்க பதில் ஜனாதிபதியானார். அதையடுத்து ரணில் விக்கிரமசிங்க பிரதமராக்கப்பட்டார். அவர் 16 மாதங்கள மட்டுமே அப்பதவியை வகித்தார்.

1994 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போது கட்சித் தலைவரான காமினி திஸாநாயக்க குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டவே, கட்சித் தலைமைப் பொறுப்பும் ரணிலிடம் ஒப்படைக்கப்பட்டது. அன்று தொடக்கம் இன்றுவரை அவர் கட்சிக்குத் தலைமை வகித்து வருகிறார். கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் அவர் போட்டியிட்டார்.

ஒரு சட்டத்தரணியான ரணில் விக்கிரமசிங்க, 1995ஆம் ஆண்டு பல்கலைக்கழக விரிவுரையாளரான மைத்திரியை திருமணம் செய்து கொண்டார். (ஐ)

## பதவியேற்பு நிகழ்வை ஒளிபரப்ப அரச தொலைக்காட்சிக்குத் தடை

கொழும்பு,டிசெ.10

புதிய பிரதமராக ரணில் விக்கிரமசிங்க நேற்று பதவியேற்றுக்கொண்ட நிகழ்வு ரூபவாஹினியில் ஒளிபரப்பாகவில்லை. பதவியேற்பு வைபவத்தை நேரடி ஒளிபரப்புச் செய்வதற்கு ஜனாதிபதி செயலகம் தடைவிதித்திருந்ததாக தகவல் தொடர்புப் பணிப்பாளர் ஆரிய ரூபசிங்க தெரிவித்திருக்கிறார்.

நேற்றைய பதவியேற்பு நிகழ்வுகளை நேரடி ஒளிபரப்புச் செய்வதற்கான சகல ஏற்பாடுகளுடனும் ரூபவாஹினிக் குழுவினர் ஜனாதிபதி மாளிகைக்குச் சென்றிருந்தனர். எனினும் அவர்கள் அந்த நிகழ்ச்சியை ஒளிபரப்புச் செய்வதற்கு ஜனாதிபதி செயலகம் தடைவிதித்தது. ஜனாதிபதியின் நேரடி உத்தரவின் பேரிலேயே இத்தடை விதிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

இதேவேளை -

ராவய, இரிதபெரமுன, சண்டே லீடர் ஆகிய பத்திரிகைகளின் செய்தியாளர்களும், ரீ.என்.எல் தொலைக்காட்சி சேவையினரும் பதவியேற்பு நிகழ்வில் கலந்துகொண்டு செய்தி சேகரிப்பதற்கும், படம் எடுப்பதற்கும் அனுமதிக்கப்படவில்லை.

இந்தச் செய்தி நிறுவனங்கள கடந்த காலங்களில் பொ.ஐ.முன்னணி அரசாங்கத்துக்கும், ஜனாதிபதிக்கும் எதிராகக்கடும் பிரசாரங்களை மேற்கொண்டுவந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## விசாரணையை எதிர்கொள்ள அனுருத்த தயாராம்

கொழும்பு,டிசெ.10

கண்டி மாவட்டத்தில் சமீபத்தில் இடம்பெற்ற வன்செயல்கள் மற்றும் படுகொலைகள் தொடர்பான விசாரணைக்குப் பூரண ஆதரவை வழங்கத் தான் தயாராக இருப்பதாக முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

தான் ஓர் அப்பாவி என்பதை நிரூபிக்க எந்தவித விசாரணையையும் எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் அவர் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருப்பதாக இலங்கை வானொலி செய்தி வெளியிட்டது.(ஐ-9)

## ரணிலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றது இலங்கையில் ஜனநாயக பாரம்பரியம் திடமாக வேரூன்றி இருப்பதைத் தெளிவாகக் காட்டுகிறது என்று பிரதமர் வாஜ்பாய் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்குப் புதிய நாடாளுமன்றம் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எனத் தான் நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஐ-9)


DAY CLASS

மீட்டல் வினா - விடை

| பாடம் | யாழ்ப்பாணம் | இணுவில் |
| --- | --- | --- |
| Eco. | வரதராஜன் | வரதராஜன் |
| Acc. | முகுந்தன் | முகுந்தன் |
| Com. | முரளி | முரளி |
| Lo.Si. | R.P.சர்மா | R.P.சர்மா, J.சுரேஸ் |
| Tam. | மீரா | பாலா |
| H.C. | ஜோதீஸ்வரன் | சுரேஸ் |
| H.M. | தரன் | தரன் |
| Geo. | குமரன் | குமரன் |
| R.C. | வசந்தன் | வசந்தன் |
| Dra. | சுகந்தன் | சுதன் |

(95753)

புதிய பிரிவுகள் - இருஇடங்களிலும் நடைபெறுகின்றன.

BARATHY
சித்தன்கேணி.


★ A/L DAY CLASS
மீட்டல் வினா - விடை
★ தரம் 6 முதல் 11 வரை
★ தரம் 5 (புலமைப் பரிசில் வகுப்பு)
அனைத்துப் பிரிவுகளும் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. (95754)

திரு
கோண்டாவில
A/L 2002
மீட்டல் வகுப்புகள்
ஆரம்பம் - இன்று 10.12.2001
(திங்கள் 7மணி)

தரம் 5 புலமைப் பரிசில் வகுப்பு மாணவர்களுக்கு
- ஒரு நற்செய்தி -
பிரபல ஆசிரியர்
திரு.வே.அன்பழகன் அவர்களால்
பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் சிவன் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள "ஞானக்குழந்தை" இல்ல பாலர் பாடசாலையில 2002ஆம் ஆண்டிற்கான வழிகாட்டல் வகுப்புகள் இன்று ஆரம்பமாகின்றன.
காலம்: 10.12.2001 திங்கள் நண்பகல் 12.00 மணிக்கு
குறிப்பு: மாணவர் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் பதிவுகளுக்கு முந்துங்கள். (95749)

ஐடியல் அக்கடமி
சண்டிலிப்பாய்
A/L DAY CLASS
கலைப்பிரிவு
தமிழ்: V.M.லிங்கம்
இ.நாகரிகம், இந்துசமயம்: T.ஸ்ரீஸ்
அளவையியல்:- E.S.பவன்
ஆரம்பம்: 10.12.2001 திங்கள் காலை 9 மணி.
நிர்வாகி.
(95736)

324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
சிறாருக்கான கணனிப்பயிற்சி
பதிவுகள் 11.12.2001 இற்கு முன்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.12.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.